Magnetic Healing.

BY

V. S. KUMARASWAMI MUDALIAR.

VELLORE.

2.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

கர்ந்தசக்தி வைத்திய சாஸ்திரம்.

(MAGNETIC HEALING)

இது,

V. S. குமாரசுவாமி முதலியாரால்

எழுதப்பட்டது.

சென்னை :

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1915

All Rights Reserved.

"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்." (திருக்குறள்)

(இதன் பொருள்) : பயனை விலக்குவதாகிய விதியினையும் வெல்வர்; அவ்விலக்கிற்கு இளையாது, வினையை (சூழ்ச்சி, வலி முதலியஅறிதல், செயல்) குற்றமற முயல்வார்.



V. S. KUMARASWAMY MUDALIAR,

VELLORE.

PROFFESOR OF MAGNETISM.

முகவுரை.

இப்புஸ்தகமானது, ஐசுவரியம், ஆரோக்கியம், செல்வாக்கு ஆகிய இவைகள் நிறைந்துள்ள பேரறைகளைத் திறக்கவல்ல மந்திரத்திறவுகோலைத் தன்னிடத்தில் அடக்கிக்கொண்டிருக்கிறது. நமது நோய்களைக் களைந்தெறிவதற்காக நம்மைப் படைத்த தயாமூர்த்தியான ஸர்வேச்வரன் ஏற்படுத்தியுள்ள விதிகள் இப்புஸ்தகத்தில் அடங்கியுள்ளன. இஃது, உயிரைப்பற்றிய இரகசியங்களை வெளிப்படுத்தி, நீடித்தவையாயும் கடுமையாயும் உள்ள வியாதிகளைத் தீர்க்கும்விஷயத்தில் மிகச்சிறந்த முறைகளைத் தெரிவிக்கிறது. இவையன்றியும், இப்புஸ்தகமானது, தமக்குத்தாமே ஒவ்வொருவரும் உதவிசெய்து கொள்ளவேண்டுமென்பதைப் போதித்து, அதற்குரிய முறையைத் தெரிவிக்கிறது. இப்புஸ்தகத்தின் உதவியினால், சிலநிமிஷங்களில் எவ்வித நோயானாலும்சரி, எவ்விதமான கெட்டவழக்கமானாலும்சரி, பார்ப்போர் அதிசயிக்குமாறு அதை நீக்கிவிடலாம். அதுமாத்திரமன்று; மனக்கோழையைத் தவிர்த்து சீர்குலைந்த நரம்புக்கூட்டங்களினால் ஏற்படக்கூடிய ஸகலவியாதிகளையும் தீர்க்க முடியும்; மனிதசரீரத்தைப் பீடிக்கும் ஸகலவியாதிகளையும் அதிசீக்கிரத்தில் இதனது உதவியினால் அடக்கக்கூடுமென்றால், இப்புஸ்தகத்தின் சிறப்பைப்பற்றிச் சொல்லவேண்டுவது யாதுளது? வியாதிகளைச் சிறிதும் நோவில்லாமல் தீர்க்கக்கூடும். அப்படித் தீர்க்கப்பட்ட

வியாதியானது மறுபடியும் உண்டாகாதென்பது திண்ணம்; இது மிகவும் ஆச்சரியப்படத்தக்கது. இவ்வைத்தியத்திற்கு ஆயுதங்களும் வேண்டாம்; இப்புஸ்தகத்தின் விலையைத்தவிர வயித்தியத்திற்கு நீங்கள் ஒன்றும் செலவழிக்கவேண்டாம். இதில் கூறியுள்ள விதிகளை ஒருதரம் படிப்பதனாலேயே நன்றாக அறிந்துகொள்ளக்கூடும். அவைகளின் பிரயோஜனத்தை உடனே பரீக்ஷித்துக் கொள்ளக்கூடும். இம்முறையை உபயோகிக்கக் கூடிய இடமோ அகன்றது; இதனால் நிறைவேற்றக்கூடிய காரியங்களோ மிகவும் சிறந்தவை. ஆகையினால், இன்றே முயற்சிசெய்யுங்கள். இச்சாஸ்திரவிஷயமாக இதுவரை எழுதப்பட்டுள்ள புஸ்தகங்களெல்லாவற்றிலும் இப்புஸ்தகமே மிகவும் அநுஷ்டானத்திற்கு யோக்கியமானதென்றும், மிகவும் எளிதில் அறிந்துகொள்ளத்தக்கதென்றும் பலர் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். குறிப்பற்ற கோட்பாடுகளிலும் அநாவசியமான தர்க்கங்களிலும் வீணாகக் காலங்கழிக்காமல், இந்நூல், விஷயத்தின் சாரத்தை ஆரம்பத்திலிருந்தே தெளிவாய்த்தெரிவிக்கிறது; இன்னஇன்னகாரியங்கள் இன்னஇன்னகாரணங்களினால் செய்யவேண்டியது அவசியமென்றும், அவைகளை இன்னஇன்னவிதமாகச் செய்யவேண்டுமென்றும் விவரமாகத்தெரிவிக்கிறது. ஔஷதப்பிரயோகமின்றிப் பிணிகளைத் தீர்க்கும் வைத்தியர்களுக்கு இப்புஸ்தகம் அளவற்ற பிரயோஜனத்தைத் தரக்கூடியது. அதுமாத்திரமன்று; இதன் உதவியினால் ஒவ்வொருமனிதனும் தன்னுடைய குடும்பத்தவர்களுக்கு மிகவும்சிறந்த வழியில் வைத்தியம் செய்யக்

கூடும். ஆகையினுல், இப்புஸ்தகம், பிரதிகுடும்பத்திலும் வைத்துக்கொள்ளவேண்டிய மிகவும் உபயோகமுள்ள அருமையான கிரந்தம். மனிதர்களிடத்தில் உள்ள பல விதமான நடையுடைபாவனைகளும் மிகவும் தெளிவாக இந்நூலில் விவரிக்கப்பட்டிருப்பதுமன்றி, ஒவ்வொரு முக்கியமான பாவனையையும் இந்நூலைப் படிப்பவர்கட்குத் தெளிவாகச் சித்திரரூபமாய்க் காட்டுமாறு, அநேக படங்களும் இந்நூலில் அச்சிடப்பட்டிருக்கின்றன. மானிடர்களுக்குச் சர்வேஸ்வரனுல் அளிக்கப்பட்டுள்ள வல்லமையின் பரமரகசியங்களையும் இந்நூல் வெளிப்படுத்துகின்றது. ஒருவனை நித்திரைபோன்ற மயக்கமடையச்செய்வதற்கு உரிய வழியையும், வியாதிகளையும், கெட்டபழக்கங்களையும் பிரபோதனைகளினுல் தீர்த்துக்கொள்ளக்கூடிய பலவழிகளையும் இந்நூல் தெரிவிக்கின்றது; அன்றியும், அவ்வாறு நித்திரைபோன்ற மயக்கத்திலுள்ள ஒருவனை நினைத்தமாத்திரத்தால் எழுப்பித் தெளிவிக்கக்கூடிய வழியையும் காட்டுகின்றது. நரம்புகளினுல் உண்டாகும் குத்துவலிகளையும், வயிற்றுவலிகளையும், மலச்சிக்கலையும், தலைவலிவியாதியையும், நரம்புக்குத்தலையும், பல்வலியையும், வாதரோகத்தையும் மற்றும் பலவித வியாதிகளையும் காந்தசக்திப்பிரயோக வைத்தியத்தினுல் ஸ்வஸ்தமாக்குவதற்கு நிச்சயமானவையும் முறைகளுடையவையுமான அநேக வழிகள் இந்நூலில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

V. S. குமாரசுவாமி முதலியார்.

பொருளடக்கம்.

விஷயம்.	பக்கம்.
பதவிளக்கம்	viii
காந்தசக்தி	1
செயலற்ற நிலைமை	3
காந்தசக்தி வைத்தியம் வரசக்தியன்று ...	5
பிழைகள் உண்டாகாதபடி காத்துக்கொள்ளுதல்	6
நம்பிக்கை	9
மனத்தை ஒன்றிலே செலுத்துதல்	9
அதைரியமடைதல்	13
இன்னம் காந்தசக்தியைப்பற்றி	14
அநுதாபம்	17
பிரபோதம்	17
ஒருவனைத் தூங்கச்செய்யும் விதம்	19
தூக்கமடைந்தவனை எழுப்பும் விதம் ...	27
நோயாளியின் மனதில் உண்டாகும் அபிப்பிராயம்	29
புத்தி ... ... — ...	30
மனம்	31
முக்கியக்கவனிப்பு	37
முகத்தின் நரம்புக்குத்தல்	42
தலைவலி	43
பல்வலி	47
கண்ணின் உபத்திரவங்கள்	47
செவிடு	49
காது நோய்	49
ஈரல் வியாதிகள்	50

அன்னுசயத்தைப்பற்றிய வியாதிகள் 51

இளைப்பை வியாதிகள் 51

குண்டிக்காய் முதலியவைகளைப்பற்றிய வியாதிகள் 53

புருஷனது ஜன்மேந்திரியங்களின் வியாதிகள் ... 54

ஸ்திரீயினுடைய ஜன்மேந்திரியங்களைப்பற்றிய வியாதிகள் 55

இருதய வியாதிகள் 57

இரத்தக்குறைவு 58

சுவாசஇந்திரியங்களின் வியாதிகள் 58

கபக்ஷயரோகம் 59

நரம்புகளைப்பற்றிய வியாதிகள் 61

சருமத்தைப்பற்றிய வியாதிகள் 61

கோணலான கழுத்து 62

மலக்குடலைப்பற்றிய வியாதிகள் 63

மண்டைத்தடிமன் 63

குடல் வியாதிகள் 65

எல்லாவித ஜ்வரங்களும் 65

தேகத்தின் எப்பாகத்திலிருந்தாவது இரத்தப் பெருக்கு 66

பித்தம் 67

தலைக்கிறுகிறுப்பு 67

கையில் கீல்வாயு 67

கைகளை மேலேவைப்பதனல் வியாதியைச் சொஸ்தமாக்குதல் 68

ஓர் சிறுதுணியைக் காந்தசக்தியுடையதாக்கும் வழி 69

ஜலத்தைக் காந்தசக்தியுடையதாக்கும் வழி ... 69

பத விளக்கம்.

காந்தசக்தியினுல் வைத்தியம் (Magnetic Healing) செய்வதென்பது : வைத்தியன் தன் ஜீவாதாரசக்தியைத் தன்னுடைய கைகளின்மூலமாக நோயாளிக்குச் செல்லும்படிசெய்து வியாதியைத் தீர்ப்பதுதான்.

மனோவசிய தத்துவத்தினுல் தூங்கச்செய்தல் (Hypnotism) என்பது : மனதை ஜாக்கிராவஸ்தையிலிருந்து சுவப்னவஸ்தைக்குக் கொண்டு வருவதுதான். (ஜாக்கிராவஸ்தை = விழித்திருக்கும் நிலை. ஸ்வப்நாவஸ்தை = தூங்கும் நிலை.)

பிரபோதம் (Suggestion) என்பது : மனதுக்கு அல்லது உணர்ச்சிக்கு ஒருகருத்தைப் புகட்டுவதுதான்.

மனுஷ்யகாந்தப் பிரபாவம் (Personal Magnetism) என்பது : மனிதரை, பிரியம், நம்பிக்கை, சிநேகம் இவைகள் உண்டாகுமாறு கவரவல்லது. ஆதலால், இது மானிடமனதின் ஓர் சக்தியாகும்.

மானிடகாந்தசக்தி (Human Magnetism) என்பது : மின்சாரத்தைப் போலவே இயற்கையாகவுள்ள ஓர்வித சக்தியாம்.

கையின் பாவனை (Passes) என்பது : தேகத்தைத் தொட்டுக்கொண்டாவது, தேகத்தைத் தொடாது சற்று விலகியாவது கையானது தேகத்தின்மேலாகச் செல்லுவதுதான்.

பாவனைகள் செய்வது என்பது (How to make Passes) : கைகளைத் தூக்கிக்கொண்டு உள்ளங்கைகளை நோயாளியின்புறமாக வைத்து, அவைகளை அவரது உச்சந்தலைமுதல் தோள்வரையில் கொண்டுவந்து, பிறகு கையின் வழியாக விரல்கள் வரையில் கொண்டுவருவது தான்.

மனவுறுதி (Will) என்பது : மனிதனுடைய பலவிதமான மனோசக்திகளும் உச்சமடைந்திருப்பதுதான்.

ஞானதிருஷ்டி (Clairvoyance) என்பது: புறக்கண்ணினால் பார்த்தறிந்து சொல்லவொண்ணாத விஷயங்களை அகக்கண்ணால் ஆத்துமா அறிந்துகொள்ளும் சக்தியடைந்திருக்கும் ஓர் மனோநிலைமை.

டெலிபதி (Telepathy) என்பது : ஐம்புலன்களின் உதவியின்றி மனவெண்ணங்களை வார்த்தைரூபமாகவோ அல்லது சித்திரரூபமாகவோ பிறருக்குத் தெரியப்படுத்துவதும், பிறரிடத்திலிருந்து அறிந்துகொள்ளுவதும்தான்.

ஜீவாதார காந்தசக்தி (Vital Magnetism) என்பது : சரீரத்திலேயேஜனித்து சரீரசம்பந்தமான விஷயங்களில் செய்வலிமையுடையதான ஓர் தேகசக்தி.

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்;
கரடி வெம்புலி வாயையும்
கட்டலாம்; ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம்;
கட்செவி யெடுத்தாட்டலாம்;
வெந்தழலின் இரதம்வைத் தைந்துலோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்;
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்;
விண்ணவரை யேவல்கொளலாம்;
சந்ததமும் இளமையோ டிருக்கலாம்; மற்றொரு
சரீரத்தினும் புகுதலாம்;
சலமேல் நடக்கலாம்; கனன்மே லிருக்கலாம்;
தன்னிகரில் சித்தி பெறலாம்;
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது. சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே!
தேசோமயானந்தமே!

(இதன் பொருள்): உண்மைப்பொருளாய் என்மனத்தில் குடிகொண்டெழுந்தருளியுள்ள ஞானஸ்வரூபியான கடவுளே! தேஜோமயமும் ஆனந்தமயமுமான தெய்வமே! மதயானையையும் வசமாக்கி நடத்தலாம்; கரடி, கொடிய புலி ஆகிய இவற்றின் வாயையும் கட்டிவிடலாம்; பெரிய சிங்கத்தின் முதுகின்மேலும் ஏறலாம்; ஸர்ப்பங்களையும் எடுத்து ஆட்டலாம்; அக்கினியில் இரசம்வைத்து ஐந்து உலோகங்களையும் வேதித்து விற்று அதுகொண்டு உண்டு ஜீவிக்கலாம்; வேறொருவருங் காணாமல் உலகத்தில் உலாவலாம்; தேவர்களையும் ஏவலாட்களாகக் கொள்ளலாம்; எப்பொழுதும் இளமையோடிருக்கலாம்; பரகாயப்பிரவேசஞ்செய்யலாம்; நீர்மேல் நடக்கலாம்; நெருப்பின்மேல் இருக்கலாம்; தனக்கு நிகரில்லாத எவ்விதசித்தியையும் பெறலாம்; ஆனால், மனதை பலதுறைகளிலும் செலுத்தாமல் ஒருதுறையில் நிலைபெறச் செலுத்திச் சும்மா இருக்கிற திறமையோ அருமையானது!

முருகன் துணை.

காந்தசக்தி வைத்திய சாஸ்திரம்.

(MAGNETIC HEALING)

"தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்."—திருவள்ளுவநாயனார்.

காந்தசக்தி :—

மானிட காந்த சக்தி (Human Magnetism) புறக் கண்ணுக்குப் புலப்படாமல், அகக்கண்ணுக்கு மாத்திரமே புலப்படும். இது, ஒருசரீரத்திலிருந்து வெளிப்பட்டு மற்றொருசரீரத்தினுள்புகும் அதிசூக்ஷ்மமான ஓர்சக்தி. அநேகவிதமான அற்புதசக்திகளைப்போலவே, இந்தச் சக்தியும், அதனுடைய பலன்களினால்மாத்திரம்தான் அறிந்துகொள்ளப்படும். மானிடகாந்தசக்தியானது இரத்த வோட்டவிஷயத்தில் மிகவும் முக்கியமானதாக இருக்கிற தென்று அநேகசாஸ்திரநிபுணர்கள் அபிப்பிராயப்படுகின் றார்கள். பிராணி தர்மகுணசாஸ்திரத்தில் (Physiology) பயிற்சியுள்ள ஒவ்வொருவரும், ஒவ்வொரு உதிரநாளத் தின் (Vein) மீதும், ஒவ்வொரு இரத்ததாதுவின் (Artery) மீதும் முற்றிலும் ஒவ்வொரு நரம்பு ஓடுகிறதென்றும், அவ்வாறு ஓடும் நரம்புகளின்வழியாக இக்காந்தசக்தி யானது பாய்ந்துசெல்லுகிறதென்றும் நன்றாக அறிவார்கள். இரத்தத்திலுள்ள சிவந்த அணுக்கள், தங்களில் நூற்றுக்கு நாற்பதுபங்கு இரும்பு அடங்கியவைகளாயிருக்கின்றன. ஒரு காந்தமானது கனப்பொருளான இரும்புக் கட்டியை

இழுக்கின்றது. அப்படியே இக்காந்தசக்தியின் ஓட்டமானது இரத்தமாகிய இரும்புநீரை ஓடிக்கொண்டிருக்கும்படி செய்யக்கூடுமென்று எண்ணுவது நியாயமன்றோ? நீண்டவெகுகாலமாக, வைத்தியர்களெல்லாரும், இரத்தாசயமானது இரத்தத்தைத் தேகமுழுதும் செல்லும்படி விசையுடன் இறைத்தது என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். பெரிய இரத்ததாதுக்கள், உதிரநாளங்கள், மற்றுமுள்ள நுண்ணிய தாதுக்கள் இவைகளின்வழியாக மந்தகதியுள்ள இரத்தவோட்டத்தை விசையுடன் செலுத்தப் போதுமானவளவு சக்தியானது இரத்தாசயத்துக்கு இல்லையென்பது திண்ணம். ஆகையினால், மேற்சொன்ன கோட்பாடு முற்றிலும் தவறென்பதற்கு ஐயமுமுண்டோ? இரத்தமானது, இரத்ததாதுக்கள் உதிரநாளங்கள் நுண்ணிய தாதுக்கள் இவைகளின்வழியாகக் காந்தசக்தியினால் இழுத்துச் செல்லப்படுகிறது என்றெண்ணுவது அக்கோட்பாட்டைவிட மிகவும் நியாயமாகத் தோன்றவில்லையா? இரத்தவோட்டம், தாதுவினின்றும் சத்துப்பொசிதல், (Secretion) தேகத்தினின்றும் அசுத்தவஸ்து கழிதல் (Excretion) ஆகிய இம்மூன்றும் பிசகின்றிச் சரியாக இருக்குமாயின், வியாதி ஒருவனை அணுகவுங்கூடுமா? ஆகையால், ஒருவன், தனது காந்தசக்தியை ஓயாது ஓடிக்கொண்டிருக்கும்படி செய்வானேயாகில், இரத்தமானது சரியாக ஓடிக்கொண்டிருக்கும்; அது காரணத்தினால், அவன் ஒரு வியாதியினாலும் பீடிக்கப்படாமலே இருப்பான்.

காந்தசக்தியினால் வைத்தியம் செய்வதற்கு உபயோகிக்கப்படும் சக்தி மானிட காந்தசக்தியேயாம். சிலர், அவ்வைத்தியத்திற்கு முதன்முதலில் காந்தக் கல்லையும், பிறகு கையையும் உபயோகித்துவந்தார்கள். கையினால் தடவுவதுபோல் பாவனை செய்வதனாலும், பிரகாசமான

ஓர் வஸ்துவை உற்றுநோக்கும்படி செய்வதனாலும், ஒருவனைத் தூங்கச்செய்யக்கூடுமென்று பிறகு கண்டுபிடிக்கப்பட்டது. ஒவ்வொருவரிடத்திலும் காந்தசக்தி இருக்கிறது. ஆனால், அது, சிலரிடத்தில் அதிகமாகவும், சிலரிடத்தில் குறைவாகவும் காணப்படும். மற்றும் சிலரிடத்தில், அது செயலற்றதாக மறைந்திருக்கும். அதை உபயோகித்துப் பலிதமாக்குவதற்கு முக்கியமாக வேண்டுவது என்னவெனில், தனது சக்தியில் தனக்குள்ள நம்பிக்கைதான். இக்கருத்தைத் திருவுள்ளம் பற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும் தமது அருமைத் திருக்குறளில்,

* "வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற."

என்று அருளிச்செய்தார்.

செயலற்ற நிலைமை :—

வைத்தியஞ் செய்துகொள்ளும் காலத்திலெல்லாம் நோயாளியானவன் சுவயமான செயலற்றவனாக இருக்க வேண்டும். அவன் அந்த ஸ்திதியை அடையும்படி செய்வதற்கு என்ன செய்யவேண்டும் என்றால், தன்னுடைய தசைநார்க்கட்டுகளைத் தளர்த்திக்கொள்ளும்படி முதலில் நோயாளிக்குச் சொல்லவேண்டும். அன்றியும், கைப்பாவனைகளினாலோ அல்லது பிரபோதங்களினாலோ அவனது மனதிற் பதிப்பிக்கக் கருதும் எண்ணங்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஸ்திதியில் அவன் தன்மனதை வைத்துக் கொள்ளும்படியும் வைத்தியன் நோயாளிக்குச் சொல்ல வேண்டும். இவ்விதமாகச் சிகிச்சைசெய்யும் வழிகள்

* (இதன் பொருள்): தொழில் செய்யுமிடத்து வலிமையென்று சொல்லப்படுவது அதனை முடிப்பதற்குரிய ஒருவனது மனத்தினது வலிமையேயாம்; அது நீங்கலான வல்லமைகளெல்லாம் அதற்கு வலிமையென்று சொல்லப்படுவனவல்ல.



No. 1.

இப்படமானது, நோயாளியை எவ்வாறு பிரபோதத்தினால் தூங்கச் செய்வதென்பதைத் தெரிவிக்கிறது. வைத்தியம்செய்வோன் வலதுகையானது நெற்றியின் குறுக்கேபோய், கன்னப்பொறிக்கு மேலாகவும், கன்னத் தெலும்புவளையிலும் தடவுவதுபோல் பாவனைசெய்யவேண்டும்.

இருப்பதே, இவைகள் பலனைத்தரத்தக்கவை என்பதற்கு நல்ல ருஜுவாகின்றது. ஒருவருடைய பிணியையும் தீர்க்காத வைத்தியனுடைய கதி என்னவாகும்! அவன் வெகு சீக்கிரத்தில் எல்லாராலும் கைவிடப்பட்டு இருந்தவிடமும் தெரியாது மறைந்து விடுவது திண்ணம். திருஷ்டாந்தமாக, மருந்துகளினால் நோய்கள் தீரவில்லையென்று வைத்துக்கொள்ளுவோம். அப்படியாயின், மருந்துகளை எவ்வளவுகாலம் ஜனங்கள் உபயோகித்து வருவார்கள்? அதே விதியானது, காந்தசக்தியினால் வைத்தியம்செய்தல், நம்பிக்கையினால் வைத்தியம்செய்தல் முதலியவைகளின் விஷயத்திலும் உண்மையாக இராதென்று யார்தான் சொல்லக்கூடும்? இவ்வழிகளினால் வைத்தியம்செய்வது அசாத்தியமான காரியமாக இருக்குமாயின், அது, இப்போது ஒவ்வொருவருஷமும் அநேகஜனங்களால் நம்பப்பட்டு அதிக விருத்தியடைந்து பரவுவதுபோலப் பரவாமல், எல்லாராலும் கைசோர விடப்பட்டு மறைந்து விடுமன்றோ? தற்காலத்தில் சிறிதும் கற்றறியாதவர்கள் தாம், இவ்வித வைத்தியத்தினால் பலனுண்டாகும் என்பதைப்பற்றி இகழ்ந்து பேசுகிறார்கள். இந்த வைத்திய வழியானது, ஏற்கெனவேயுள்ள எல்லாத் திருத்தமான சாஸ்திரங்களுக்குமுள்ள சக்திகளுக்குச் சமமான சக்தியுடையதாயிருக்கின்றது; அன்றியும், இதனுடைய சக்தியானது வெகு வேகமாக அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஆதலால், இதுமாத்திரம் நன்றாய் அறிந்துகொள்ளப்படுமாயின், மற்றெல்லாவித சாஸ்திரங்களைப்பார்க்கிலும் மிகவும் அதிகசக்தியை யுடையதாகக் கூடியதாயிருக்கிறது.

காந்தசக்தி வைத்தியம் வரசக்தியன்று :—

காந்தசக்தியினால் வைத்தியஞ்செய்யும் திறமை வரசக்தியன்று; அது ஈசனால் யாவருக்கும் அளிக்கப்பட்ட

சக்தியேயாகும். சாதாரணமான புத்தியும் ஊக்கமுமுள்ள ஒவ்வொருவரும் இவ்வித்தையைக் கற்றுக்கொள்ளக்கூடும். இச்சக்தியினுல், எண்ணிறந்தோர், பலருடைய வியாதிகளைத் தீர்த்து, கெட்டவழக்கங்களை நீக்கியுள்ளார்கள்; துன்மார்க்கர்களை நியாயஸ்தர்களாகவும் யோக்கியர்களாகவும் தங்களுடைய வாழ்நாளைக் கழிக்கும்படி திருத்தம் செய்துமுள்ளார்கள் எண்ணிறந்தார். ஆனுல், இச்சக்தியினுல் தகுந்தபலன் உண்டாகவேண்டுமென்று விரும்புவோர் இதைச் சுய நன்மையைக்கருதி உபயோகிக்கக் கூடாது. இதனை இப்புஸ்தகத்தைப் படிப்போர் யாவருக்கும் தெரிவிக்க விரும்புகிறேன். நாம் பிழைப்பதுடன், பிறரையும் பிழைக்கவிடவேண்டுமென்ற கோட்பாட்டைக் கடைபிடித்து நீர் நடக்கவேண்டும். அப்படி நடப்பீராயின், நீர் செய்யும் முயற்சிகளினுல் ஜயமுண்டாகுமென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை. காந்தசக்தியினுல் வைத்தியம் செய்யும் முறையானது இயற்கையின் சொந்தமுறை. ஆதலால், மருந்துகளினுலாவது மூலிகைகளினுலாவது வைத்தியம்செய்யும் முறையைவிட இது அதிசீக்கிரத்தில் பிணியைத் தீர்க்கவல்லது. நோயாளிகள் இப்போது வைத்தியரிடத்திற்குப் போகிருர்கள் அல்லவா? அதுபோலவே, காந்தசக்தியினுல் வைத்தியம் செய்வோரிடத்திற்கும் போகக்கூடிய காலம் மிகவிரைவாக நெருங்கிக் கொண்டிருக்கிறது.

பிழைகள் உண்டாகாதபடி காத்துக்கொள்ளுதல் : —

நோயாளியானவன் நரம்புகள் எளிதில் சலிக்கப் பெறக்கூடியவனுயிராவிட்டால், காந்தசக்தியினுல் வைத்தியம்செய்வோனுடைய கை நோயாளியைத் தொடவேண்டுமென்பது அத்தியாவசியமன்று. நோயாளியானவன் நரம்புகள் எளிதில் சலிக்கப்பெறக் கூடியவனுயிருப்பானுயின்,

நோயுள்ளவிடத்திற்கு நாலு அங்குலம் மேலாகவே கையி னல் தடவுவதுபோலப் பாவனைச்செய்தாற்போதுமானது. அவ்வைத்தியனுக்கு நோய் வீற்றிருக்குமிடமானது நிச்சய மாகத் தெரியாவிடில், நோயாளியின் தேகமுழுவதின் மேலும் முன்புறம் பின்புறம் ஆகிய இரண்டிலும் தனது முறைமைய உபயோகிக்கவேண்டும். இந்த வைத்திய முறையை உபயோகிக்க ஆரம்பிக்கும்போதே, மருந்துகளை யும், வைத்தியர்களையும், வேறுவிதமான வைத்தியமுறை களையும்பற்றி இகழ்ந்துபேசவேவேண்டாம். ஜனங்களுக்கு இம்முறையில் நம்பிக்கையிருக்குமாயின், அப்படி செய் வதனுல் ஒருதீங்கும் உண்டாகாது. ஆனுல், இவ்வைத்திய முறையில் ஜனங்களுக்குள்ள நம்பிக்கை தற்காலம் குறை வாக இருக்கிறது. ஆகையினுல், வாய்திறவாது உமதுவேலை யைச் செய்து அதன்பலனைப் பார்த்துப் பிறர் எல்லா வற்றையும் அறிந்துகொள்ளும்படி விட்டுவிடுவதே மிகவும் நலம். நீர் அநுஷ்டிக்கும் வழியைக்குறித்துப் பிறர் குற்றம் கண்டுபிடிப்பாராயின், நீர் அதை அதிகமாகப் பாராட்டாமலிருக்கவேண்டும் ; அவ்வாறு இருப்பீராயின், கூடிய சீக்கிரத்தில் உம்மைச்சுற்றிலுமுள்ளோர் யாவரும் உம்மை ஆதரிப்பார்கள் என்பது திண்ணம். அடியில் கண்ட திருக்குறள் கவனிக்கத்தக்கது.

* "ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்."

---

* (இதன் பொருள்): தீங்கு செய்தவனுக்கு உண்டாவது ஒருநாள் இன்பமே; அதைப் பொறுத்தவர்க்கு உலகமழியுமளவும் கீர்த்தி உண்டாகும்.

No. 2

இப்படமானது, நோயாளியை எவ்வாறு தூங்கச்செய்வதென்பதைத் தெரிவிக்கிறது.

நம்பிக்கை :—

* "முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானும்
இன்சொலினதே அறம்." — (திருக்குறள்)

† "அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்." — (திருக்குறள்)

என்று பெரியோர் கூறியருளினராதலின், நோயாளியுடன் நீர் பேசும்போது உமது முகம் சந்தோஷத்தினால் மலர்ந்ததாயும், உமது நம்பிக்கையைக் குறிப்பிப்பதாயும் இருக்கவேண்டும். "உலகத்தில் யாராவது உன்னுடைய பிணியைத் தீர்க்கவல்லவருண்டாயின், அப்படி செய்ய வல்லவன் நானொருவனேயொழிய வேறொருவரும் இல்லை" என்று நோயாளியினிடத்தில் மயங்காது உறுதியாகச் சொல்லவேண்டும். ஆனால், அவ்வாறு சொல்லும்பொழுது, நீர் அஹம்பாவமுள்ளவராகக் காட்டிக்கொள்ளக்கூடாது.

மனதை ஒன்றிலே செலுத்துதல்:—

தனியாக விருக்கும்போது தன்னுடைய மனதை நிலைநிறுத்தி ஓரேவிஷயத்திற் செலுத்துதல் நலமென்றும், அப்படிசெய்தால் வியாதி அதிக சீக்கிரத்தில் சொஸ்தமாகுமென்றும் நோயாளியிடத்திற் சொல்லவேண்டும்; அவ்வாறு மனதை நிலைநிறுத்தி ஓரேவிஷயத்திற் செலுத்தும்போது கண்களை மூடிக்கொண்டால் அப்படி

---

* (இதன் பொருள்): தருமமானது, கண்டபொழுதே முகத்தால் விரும்பி இனிமையாகப் பார்த்துப்பின் அடைந்தவிடத்தில் மனங் கலந்த இனியசொற்களைச் சொல்லுதல் இடத்திலேயே உள்ளது.

† (இதன் பொருள்): கண்டபொழுதே முகமலர்ந்து அதனோடு இனியசொல்லையு முடையவனாகப் பெற்றால் அது மனமகிழ்ந்து ஒருவனுக்கு வேண்டியபொருளைக் கொடுத்தலினும் நல்லதாம்.

செலுத்துவது சுலபமாக விருக்குமென்றும் அவனுக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படி தெரிவிக்கும்போது, அதற்குப் பிரமாணமாக இந்நாட்டில் மஹாயோகியாக விளங்கியிருந்த தாயுமானசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய,

*"எண்ணாத தெண்ணிய நெஞ்சே! துயரொழி; என்னிரண்டு
கண்ணே! உறங்குறங்கு என்னாணை; முக்கண் கருணைப்பிரான்
தண்ணார் கருணை மௌனத்தினால் முத்தி சாதிக்கலாம்
நண்ணாத தொன்றில்லை; எல்லாநலமும் நமக்குளவே"

என்னும் அருமைப்பாடலையும், அதன் கருத்தையும் நீர் தெளிவாக உரைத்தல் உசிதமாம். நிமிஷமேனும் நிலைபெறாது குரங்கைப்போல ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றி பலவிஷயங்களிலே பரபரப்பாய்ச் செல்லுகின்ற மனதை நிறுத்தி ஓரேவிஷயத்திற் செலுத்துவதென்றால், மனது ஓர் குறிப்பிட்ட காலம்வரையில் வேறு விஷங்களைப்பற்றி நினைக்காமல், குறிப்பிட்ட ஓரேவிஷயத்தைப்பற்றியே நினைத்துக்கொண்டு இருப்பதுதான் என்று நோயாளிக்கு விளங்கும்படி எடுத்துரைக்கவேண்டும். ஒரு விஷயத்திற் புத்தியை ஒவ்வொருதரம் செலுத்தும்பொழுதும், மூளையிலுள்ள அணுக்களிற் சில அவ்விஷயத்தில் சிறந்தனவாக ஆகின்றனவென்றும், அவைகளின் உதவியினால் வியாதியைச் சீக்கிரத்தில் சொஸ்தமாக்கக் கூடுமென்றும் அவனிடத்திற் சொல்லவேண்டும். மனதை நிறுத்தி ஓர்

---

* (இதன் பொருள்.): எண்ணத்தகாத எண்ணங்களை யெல்லாம் எண்ணி யெண்ணி வருந்துகிற என் மனமே! விசாரங்களையும், துயரங்களையும் விட்டுவிடு. என்னுடைய இரண்டு கண்களே! உறங்குங்கள், உறங்குங்கள். இது எனது கட்டளையாம். சிவபிரானது கருணையினால் மௌனத்தில் முத்தியைப் பெறலாம்; அப்பொழுது நாம் அடையப்பெறாத பேறு வேறொன்று மிராது; எல்லா நன்மைகளும் நமக்கு உண்டாகும்.

விஷயத்திற் செலுத்தும் என்று நோயாளியினிடத்தில் சொல்வதைக் காட்டிலும், ஓர் விஷயத்தைப்பற்றி எண்ணுமென்று சொல்வது மிகவும் நலமென்று நம் அநுபவத்தில் தெரிந்துகொண்டிருக்கிறோம். மனத்தையடக்கி ஒரே விஷயத்திற் செலுத்துவதென்றால் என்ன அர்த்தம் என்று நன்றாக அறியும் அநேகபுத்திமான்கள், அதனை அறிந்தவர்களாயினும், அவ்வாறு தங்கள்மனத்தை வேலைசெய்யும்படி செய்வதற்குரிய வழியை அநுபவத்தில் அறியாதவர்களாயிருக்கிறார்கள். அநேகமாக எல்லாருக்கும் ஒரு விஷயத்தைப்பற்றி எண்ணத்தெரியும்; அதுசாதாரணம்; ஆனால் ஊன்றியெண்ணுவதற்கோ, மனதையடக்கி ஓர் நெறியில் இடைவிடாது செலுத்தவேண்டுவது அவசியம்; இதுதான் மிக விசேஷமானது. ஆகையினால், நோயாளியினிடம் ஏதோ ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுச்சொல்லி, அதைப்பற்றி ஊன்றி எண்ணும்படி சொல்லுவீராயின், அவன் தான்செய்கிறது இன்னதென்று அறியாமலே உமது கருத்திற்கிசைய அவ்விஷயத்தில் தன்மனதை அடக்கிச் செலுத்துவான். அதனால், அவசியமான மூளையணுக்கள் அவ்விஷயத்தில் விசேஷமடைந்து வியாதி எளிதில் சொஸ்தமாகும். கூடியவரையில் தன்னுடைய வியாதியைப்பற்றி அதிகமாக நினைக்காமலிருக்கும்படி நோயாளியிடத்திற் சொல்லவும். நோயாளியானவன் தன்னுடைய வியாதியைப்பற்றி ஒவ்வொருதரம் பேசும்பொழுதும், மூளையிலுள்ள சில அணுக்கள் அவ்விஷயத்தில் பலஹீனமடைந்து, வியாதியை அதிகரிக்கச்செய்யும். சந்தோஷமாகக் காலங் கழிப்பவர்களுடன் சிநேகம் செய்யும்படி நோயாளிக்குப் புத்திகூறவேண்டும். நோயாளியினிடத்தில், அவன் பரிதாபப்படத்தக்க தோற்றமுடையவனாயிருக்கிறானென்றாவது, அவனுடைய ஸ்திதியைப் பார்க்கும்போது தனக்கு மிகவும் வருத்தமாய் இருக்கிறது

No: 3.

இப்படமானது, ஒருவனை எவ்வாறு தூங்கச்செய்வதென்பதைத் தெரிவிக்கிறது.

என்றுவது நீர் சொல்லாதிருப்பதோடு ஒருவரும், அவ்வாறு சொல்லாமல் பார்த்துக்கொள்ளவும் வேண்டும்.

* "ஆக்கமும் கேடும் அதனல் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு."

என்ற நாயனருடைய திருக்குறள் இங்கு அறியத் தக்கது. நோயாளியுடன் பழகுவோர், வைத்தியம்செய்து கொள்ள ஆரம்பித்ததுமுதல் முகமும் தேகமும் தெளிவடைந்துகொண்டிருக்கின்றனவென்று அவனிடம் நம்பிக்கை உண்டாகும்படிச் சொல்லவேண்டும்.

அதைரியமடைதல் :—

காந்தசக்தியினல் வைத்தியம் செய்பவன், வைத்தியம்செய்வதில் தனக்கு நேரிடக்கூடிய அபஜயங்களினல் மனம்சோர்வடையக்கூடாது. இக்கருத்தைத் திருவுள்ளம் பற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனரும் தமது அருமைத் திருக்குறளில்,

† "அருமை யுடைத்தேன் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்."

---

* (இதன் பொருள்): நன்மையின் அபிவிருத்தியும் அழிவும் தம் சொல்லால் வருமாதலால் அத்தன்மையதாகிய சொல்லினிடத்தில் தவறுதலை ஒவ்வொருவனும் தம்மிடத்தில் உண்டாகாமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

† (இதன் பொருள்): தம் சிறுமையை நோக்கி நாம் இவ்வினையை முடித்தல் அருமையுடையதென்று நினைத்துத் தளராமல் இருக்க வேண்டும். அது முடிப்பதற்கு ஏற்ற பெருமையைத் தமக்கு முயற்சி உண்டாக்கும்.

* " துன்ப முறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. "

என்று அருளிச்செய்தார்.

ஒவ்வொருமனிதனுக்கும் சிலசமயங்களில் அபஜய முண்டாவது சகஜந்தானே; யானைக்கும் அடிசறுக்கு மன்றோ? முதல்முதலில் நீர் பலருக்கு வைத்தியம்செய்து, அவர்களுடைய நோய் தீராவிட்டால், அதனால் இம் முறையைப்பற்றி நீர் கெட்ட அபிப்பிராயம் கொள்ளவே கூடாது. உம்முடைய அபஜயங்கள் உமது பிசகுகளி னால் ஏற்பட்டவைகளேயொழிய வேறல்ல. புஸ்தகங்களி னாலும் உற்றுப்பார்ப்பதனாலும் அறியவொண்ணாத அநேக முக்கியமான விஷயங்களை, அப்பிசகுகளினால் நீர் அறிந்து கொள்ளுவீர். அநுபவமானது கடினமானதேயாயினும், புத்திபுகட்டுவதற்கு அதுவே சிறந்ததென்பதை ஞாபகத் தில் வைத்துக்கொள்ளவேண்டும். இன்னது செய்வ தென்று மனதில் திட்டமாக ஏற்பாடு செய்துகொண்ட வர்கள்தாம், தாங்கள் செய்யக்கூடிய பிசகுகளைத் திருத் திக்கொள்ளும் சக்தியை உடையவர்களாயிருப்பார்கள். நீர்செய்த காரியம் ஒன்று பிழையெனத் தெரிந்துகொண் டால், பிற்பாடு அதைச்செய்யாமலிருக்க முயலவேண்டும். நீர் ஏதாவது ஓர்பிழையைச் செய்தால், அதை வார்த்தை யினாலாவது செய்கையினாலாவது நீர் வைத்தியம் செய் யும் நோயாளி கவனிக்கும்படி செய்யவேகூடாது; தானா கவே அவன் ஒருபோதும் அறிந்துகொள்ளவேமாட்டான்.

இன்னம் காந்தசக்தியைப்பற்றி :—

ஜடசரீரத்திற்கும் மனதுக்கும் மன வுறுதிக்கும் ஆரோக்கியத்தையும் பலத்தையும் கொடுக்கக் கூடியது

* (இதன் பொருள்): முதலில் தேகப்பிரயத்தனத்தால் தமக்குத் துன்பம் மிக வருமானாலும் அது நோக்கித் தளராமல் முடிவிலே இன்பம் தரும், வினையை மனோபலமுடையவராய்ச் செய்க.

ஜீவாதார காந்த சக்தியேதான். சுவாசாசயத்தில் (Lungs) போதுமானவளவு காந்தசக்தியில்லாதிருக்குமாயின், க்ஷய ரோகம் (Consumption) சுவாசகாசரோகம் (Bronchitis) மற்றுமுள்ள இத்தகைய ரோகங்கள் உண்டாகும். இரத்தாசயத்திற்குப் போதுமானவளவு காந்தசக்தி வந்துசேராவிட்டால், இருதய வியாதிகள் (Heart diseases) உண்டாகும். அன்னாசயம் (Stomach), ஜலாசயம் (Bladder), குண்டிக்காய் (Kidney), ஈரல் (Liver) முதலியவைகளின் விஷயத்திலும் காந்தசக்தி குறைவாகவிருந்தால், மேற்கூறியவாறு வியாதிகளுண்டாகும். ஜீவாதார காந்தசக்தி (Vital Magnetism) யானது பெரும்பாலும் அன்னாசயத்திலும் சுவாசாசயத்திலும்தான் உற்பத்தியாகிறது. ஆகையினால், நல்ல ஆஹாரத்தைமாத்திரமே உண்டு பரிசுத்தமான காற்றையே உட்கொள்ளவேண்டுவது அவசியம். சுவாசாசயத்தை விருத்தியடையச்செய்தால், காந்தசக்தி விருத்தியடையும்; நல்ல உணவை உண்டாலும் காந்தசக்தி விருத்தியடையும். ஒவ்வொருநாளும், காலையில் எழுந்திருந்தவுடன், நல்ல சுத்தமான காற்றை உட்கொண்டு, சுவாசாசயங்களை முழுவதும் அதனால் நிரப்பிக்கொண்டு, பிறகு மெதுவாக மூச்சை வெளிவிடவேண்டும். இவ்வாறு, பத்து அல்லது பதினைந்துநிமிஷநேரம் செய்யவேண்டும். இவ்வாறு ஒருநாளைக்கு இரண்டுதடவை தவறுது வழக்கமாகச் செய்துவந்தால், கூடியசீக்கிரத்தில் உமது தேகத்திலுள்ள ஒவ்வொரு இந்திரியங்களுக்கும் இச்சூக்ஷ்ம சக்தியில் போதுமானவளவு செல்லும். நோயாளியின் விஷயத்திலும் இப்படிச்செய்வது நலத்தையே விளைவிக்கும். பூர்வகாலத்தில் முனிவர்கள் அந்தணர்கள் முதலியோர் சுவாசத்தை முறைப்படி உட்கொண்டு வெளிவிடுவதாகிய பிராணாயாமம் என்னும் நியமத்தால் தீர்க்காயுசும் திடகாத்திரமும் மகிமையும் கூடினவர்களாய் அரியபெரிய



No. 4.

இப்படமானது, ஒருவனை எவ்வாறு தொடாமல் தூங்கச் செய்வதென்பதைத் தெரிவிக்கின்றது.

காரியங்களைச் சுலபமாகச் சாதித்துவந்தார்களென்பதை நமது இதிஹாஸ புராணங்களினால் நன்றாக நாம் அறிந்து கொண்டிருக்கிறோமன்றோ? தேகமானது வியாதியினால் பீடிக்கப்பட்டிருக்கையில், தனது காந்தசக்தியை அதிக மாக்கிக்கொள்ளவேண்டுவது அவசியம். அதற்காக, இவ் வழக்கத்தை அநுஷ்டித்துவரவேண்டும். காந்தசக்தியை விருத்தியடையும்படி செய்துகொள்ளுவதற்கு மற்றோர் சிறந்தவழி உண்டு. அது என்னவெனில், நோயாளியின் பக்கத்திலிராமல் வெகுதூரத்திலிருந்துகொண்டு வைத்தி யம்செய்ய முயலுவதுதான். இப்படி செய்வதனால், மனதை அடக்கி ஒரேநெறியிற் செலுத்தக்கூடிய சக்தியானது வெகுசீக்கிரத்தில் அதிகரிக்கும். அதனால், மனோசக்தி விருத்தியடைகிறது. இவ்வாறு செய்வதில் தகுந்த பலன் உண்டாகவேண்டுமாகில், காந்தசக்தியினால் வைத்தியம் செய்வோன், தனது மனத்தில் நோயாளியைச் சித்திரித் துக்கொண்டு, வேறுவிதமான எண்ணங்கள் தன்மனத்தில் புகாமல் தடுத்து, தான் செய்யக்கருதும் காரியத்தை அச் சித்திரத்திற்குப் பிரபோதமாக எடுத்துச்சொல்லக்கூடிய திறமையுடையவனாய் இருக்கவேண்டும்.

அநுதாபம் : —

காந்தசக்தியினால் வைத்தியஞ்செய்வோன், நோயாளி யினிடத்தில் எப்போதும் அநுதாப முள்ளவனாயும், அவ னது பிணியைத் தீர்க்கவேண்டுமென்கின்ற ஆவலுடைய வனாயும் இருத்தல்வேண்டும். அப்படியிராவிடில், அந்த வைத்தியனுக்கு நல்ல ஜயம் உண்டாகாது.

பிரபோதம் : —

காந்தசக்தியினால் வைத்தியம்செய்வோன் பிரபோத சக்தியைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டுவது அவசியம்.

காந்தசக்தியினல் வைத்தியஞ் செய்வோர்களில் அநேகர், இந்தச்சக்தியில்லாமலேயேகூடக் காரியசித்தியடைகிருர்கள். ஆயினும், அவர்கள், பிரபோதத்தினலுண்டாகும் பலனே அறிந்துகொண்டு, அச்சக்தியை வருவித்துக்கொள்வார்களாகில், அவர்களுக்கு முன்னிலும் அதிகமான ஜயம் உண்டாகும் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

காந்தசக்தியினல்மட்டும் சொஸ்தமாக்க முடியாத அநேகவியாதிகளைப் பிரபோதசக்தியினுதவியினல் சொஸ்தமாக்கமுடியும். அன்றியும், ஒருவனது வழக்கங்களைக் காந்தசக்தியினல்மட்டுமே திருத்துவது அசாத்தியம். எவ்விதவழக்கத்தையும் பிரபோதத்தினல் சுலபமாகத்திருத்திவிடலாம். நோயாளியானவன் இச்சக்தியினல் தூங்கவைக்கப்பட்டபிறகு, அவன் காந்தசக்தியினல் வைத்தியம்செய்வோன் சொல்லும் பிரபோதங்களை உண்மையான விஷயங்களாக மனத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஸ்திதியில் வந்துவிடுகிருன். ஆகையினல், நோயாளியானவன் இப்படிப்பட்ட தூக்கத்திலிருக்கும்பொழுது, 'விழித்துக்கொண்டபின் உன்தேகம் இவ்வாறிருக்கும்' என்றோ அல்லது, 'நீ இன்ன இன்ன காரியத்தைச் செய்வாய்' என்றோ அந்நோயாளியின் மனத்தில் பதியுமாறு பிரபோதமாகச் சொல்லுவீரேல், அப்பிரபோதத்தினல் நீர் கருதும் விஷயம் உடனே சித்திக்கும். நோயாளி தூக்கத்திலிருக்கும்போது அவன் விழித்துக்கொண்டபின் அநுஷ்டிப்பதற்காகச் சொல்லும் பிரபோதங்கள், தூக்கத்திற்குப் பிந்திய பிரபோதங்களெனப்படும். வியாதிகளையாவது கெட்ட வழக்கங்களையாவது தீர்ப்பதற்கு உபயோகிக்கப்படும் பிரபோதங்கள், சாதாரணமாகத் தூக்கத்திற்குப் பிந்திய பிரபோதங்கள்தாம். ஆனல், ஒருவனுடைய வியாதியையாவது கெட்ட வழக்கத்தையாவது தீர்ப்பதற்கு அவனை

முதலில் தூங்கவைக்க வேண்டுவது அத்தியவசியம் என்று அதனுல் அநுமானித்துக்கொள்ளக்கூடாது. ஒருவன் விழித்துக்கொண்டிருக்கும்போதுகூடப் பிரபோதங்களினுல்மட்டுமே அவனுடைய வியாதிகளையோ அல்லது கெட்ட வழக்கங்களையோ தீர்க்கக்கூடும். பிரபோதத்தினுல், ஒருவனுடைய வியாதிகளையோ கெட்ட வழக்கங்களையோ தீர்க்கவேண்டுமாகில், அவனைத் தூங்கச்செய்வது மிகவும் நலமாயிருக்கும்; ஆதலால், அவனைத் தூங்கச்செய்ய முயலவேண்டும். அவன் தூங்கினுலும் தூங்காவிட்டாலும், அவனுக்குச் சொல்லவேண்டிய பிரபோதத்தை நீர் சொல்லவேண்டியதுதான். அவன் தூங்காவிட்டாலும், அவன் நல்ல தூக்கத்திலிருப்பதுபோலவே நீர் பாவித்து அதைச் சொல்லவேண்டும். ஆனுல், ஒருவன் விழித்துக்கொண்டிருக்கையிலேயே பிரபோதத்தினுல் வைத்தியஞ்செய்தால், காரியம் சித்திக்கச் சிறிது காலதாமதமாகும்.

ஒருவனைத் தூங்கச்செய்வதற்கு இனிக் கூறப்படுகின்றவையே சிறந்த வழிகளாக இருக்கின்றன. அவையாவன:—

(1) நோயாளியானவன் உட்காருவதற்குச் சக்தியில்லாதவனுயிருப்பானுகில், அவனைப் படுக்கவைக்கவேண்டும். பிறகு, அவனுடைய வலதுகையை உமது இடதுகையினுல் பிடித்துக்கொண்டு, உமது இடதுகைப் பெருவிரலானது நோயாளியினது புறங்கையின் நடுமையத்தில் இருக்கும்படி வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு, அவனது நெற்றிக்குமேலாகவும், கன்னப்பொறிமுதல் கன்னத்தின் எலும்புவரையில் மேலாகவும், உமது வலது கையினுல் தடவிக்கொடுப்பதுபோல் பாவனை செய்துகொண்டே, (1 - ஆவது நம்பர் படத்தைப் பார்க்கவும்.)

No. 5.

இப்படமானது, ஒருவனை கீழிருந்து மேலேபோகும் பாவனைகளினால் தூக்கத்தைப் போக்கும் விதத்தைத் தெரிவிக்கிறது.

"நீர் மிகவும் களைத்தவராயும், தூக்கமுள்ள கண்களை உடையவராயும் இருக்கிறீர்; நித்திரையினால் மயக்க முள்ளவராக இருக்கின்றீர்; உமக்கு எல்லாம் இருட்டாகக் காணப் படுகின்றன"

என்னும் இவ்வார்த்தைகளையும், இவ்விதமான வேறு வார்த்தைகளையும் நீர் அவரிடத்தில் சொல்லவேண்டும். இவ்வாறு சொல்வதில் பத்துநிமிஷநேரம் கழித்தபின், அவர், தம்முடைய பிணியைத் தீர்ப்பதற்கு நீர் உரைக்கும் பிரபோதங்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஸ்திதியில் இருப்பார். மேற்கூறிய வார்த்தைகளையேதான் உபயோகிக்க வேண்டுமென்பது அவசியமன்று. அவரைத் தூங்கச்செய்வதாகிய நீர் வேண்டும்பலனை அடைவதற்கு ஏற்ற வார்த்தைகளை உமதிஷ்டப்படி உபயோகிக்கலாம். தூக்கம் வருவதற்குச் சொல்லும்வார்த்தை, தெளிவாகவும், உறுதியாகவும், இனிதாகவும், நோயாளியின்மனத்தில் பதியும்படி இருந்தால், அவர் உடனே உமது சொல்லை ஏற்றுத் தூங்குவார்; அப்போது உமக்குக் காரியசித்தியாகும்.

* "விரைந்து தொழில் கேட்கும் ஞாலம்; நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

என்ற திருக்குறள் கவனிக்கத்தக்கது.

(2) புஜங்கள் நாற்காலியின் பின்புறத்திற்குமேலாகவே இருக்குமாறு, நோயாளியை ஒரு நாற்காலியின்மீது உட்காரவைக்கவும். பிறகு, அவனுக்கு வலது புறத்தில் நின்றுகொண்டு, உமது வலதுகையின் பெருவிரல் முதல்மூன்று விரல்களினால் அவனுடைய கன்னப்பொறியைப் பிடிக்கவும். அப்படி பிடிப்பதானது, அழுத்தமாக இருக்கக்

* (இதன் பொருள்): சொல்லப்படும் காரியங்களை ஒழுங்குபடக் கோத்து இனிதாகச் சொல்லுதல் வல்லவரைப் பெற்றால், உலகமானது அவைகளை விரைந்து ஏற்றுக்கொள்ளும்.

கூடாது; மெதுவாகவே இருக்கவேண்டும். கழுத்தானது தலையுடன் சேருமிடத்துக்கு அடுத்தாற்போலக் கீழ்ப்புறத்தில் நோயாளியின் கழுத்தின் பின்பக்கத்தை உமது இடதுகையினுல் பிடித்துக்கொள்ளவும். அவ்வாறு பிடிப்பதில், உம் கையில் அடங்கக்கூடிய அவ்வளவு பாகத்தை இறுக்கிப் பிடித்துக்கொள்ளவேண்டும்; ஆனுல், நோயாளிக்கு நோயுண்டாகாமல் பார்த்துக்கொள்ளல் வேண்டும். இவ்வாறு பிடிப்பதனுல், இரத்தவோட்டமானது தலைக்குச்செல்லாமல் சற்றுத் தடைப்படும். இயற்கையாக ஒருவன் தூங்கும்பொழுது, அவனது மூளையில், அவன் விழித்திருக்கும்பொழுது இருக்குமவ்வளவு இரத்தவோட்டம் இராது. கூடியவரையில் மூளைக்குச் செல்லும் இரத்தவோட்டத்தைக் குறைப்பதனுல், ஒரு விதமான தூக்கமயக்கத்தை உண்டாக்கக்கூடும். இம்மயக்கத்திற் சொல்லும் உமது பிரபோதவார்த்தைகளுடைய சக்தி அதிகமாக இருக்கும். பிறகு, நோயாளி கண்ணை மூடிக்கொண்டு மனவுறுதியுடன் தூங்கவேண்டுமென்று நீர் நினைத்துக்கொண்டு, "நான் களைத்துப்போனேன்; எனக்குத் தூக்கம் வருகிறது" என்று திருப்பித்திருப்பிச் சொல்லிக்கொண்டே யிருக்கும்படி நோயாளிக்குச் சொல்லவும். அவர் அப்படி சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, அவருடைய தலையை வலதுபுறமாகச் சுற்றவும்; அதாவது, தலையின்மீது ஓர் கைக்கடியாரத்தை மேல்நோக்கிப் படுக்க வைத்தால், அதனுடைய முட்கள் எப்புறமாகச் சுற்றுமோ அப்புறமாகச் சுற்றவும். அவர் தூங்கும்வரையில் இவ்வாறே செய்துகொண்டிருக்கவேண்டும். நீர் தலையைச் சுற்றும்போது மெதுவாகச் சுற்றவேண்டும். அவ்வாறு சுற்றிக்கொண்டிருக்கும்போது, "நீர் மிகவும் களைத்துத் தூக்கமயக்கமுள்ளவராக இருக்கிறீர்; என்னுடைய குரலைத்தவிர வேருெருசப்தமும் உமது காதில் விழவில்லை.

இப்போது யாராவது உம்மைக் கூப்பிட்டால் நீர் பதில் சொல்லமாட்டீர்; ஏனெனில், அவர் கூப்பிடுவது உமது காதில் படவில்லை. நான் பத்து எண்ணுவதற்குள் அயர்ந்து தூங்கிவிடுவீர்'' என்று சொல்லவேண்டும். பத்துவரையில் மெதுவாக எண்ணிவிட்டு, பிறகு, "நீர் தூங்கிவிட்டீர்; எல்லாம் ஒரேஇருட்டாக இருக்கிறது'' என்று சொல்ல வேண்டும். பிறகு, தலையைச் சுற்றுவதைக் குறுக்கிக் கொண்டேவந்து, கடைசியாக, சுற்றுவதை நிறுத்திவிட வேண்டும். அவரோ தம் தலையைச் சுற்றிக்கொள்ளும்படி விடக்கூடாது. அவர் அப்படி செய்வாராகில், "ஐயா! நீர் எவ்வாறு உமது தலையையும் சுற்றிக்கொண்டு, அதேசமயத்தில், தூக்கத்தையும்பற்றி நினைக்கக்கூடும்?'' என்று அவரைக் கேட்கவேண்டும். தலையைச் சுற்றுவதைக் குறைத்துக்கொண்டுவரும்போது, "நீர் தூக்கமயக்க முள்ளவராக இருக்கிறீர்'' என்று ஒரேவிதமான சமதொனியுடன் சொல்லிக்கொண்டு இருக்கவேண்டும். தலையைச் சுற்றுவதை நிறுத்தினவுடன், கழுத்தின் பின்புறத்தில் அழுத்திப் பிடித்திருக்கும் பிடியைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்த்த வேண்டும். ஆனால், இடதுகையை அந்நிலையிலேயே வைத்துக்கொண்டிருக்கவேண்டும். உடனேவலதுகையின் பிடிப்பைக் கொஞ்சம்கொஞ்சமாகத் தளர்த்தி, அதை, நோயாளியின் இருதயத்தின்மீது வைக்கவும். பிறகு, அவரிடம், "நீர் ஆழ்ந்து மூச்சுவிடுகின்றீர்'' என்று சொல்லவும். அவர் மூச்சை உட்கொள்ளும்பொழுது இருதயத்தின்மீது வைத்த கையை அழுத்தாமல் தளர்த்தி, மூச்சுவிடும்போது அதைச் சுலபமாக்குவதற்காக அக்கையை அழுத்தவேண்டும். "நீர் வேகமாக மூச்சுவிடுகிறீர்; நீர் ஆழ்ந்து மூச்சு விடுகிறீர்; என்குரலைத்தவிர வேறொருசப்தமும் உமது காதிற் கேட்கவில்லை'' என்று அவரிடம் சொல்லவேண்டும். இவ்வாறு செய்யும்போதெல்லாம், இடைவிடாது ஏதாவது



No. 6.

இப்படமானது, தலைவலிக்கு வைத்தியம்செய்யும் வழியைக் காட்டுகிறது. தலைவலியைப்பற்றிக் குறித்துள்ளதைப் படித்தால் எல்லாம் விவரமாகத் தெரியும்.

சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும். அவரைத் தூங்கச் செய்தவுடன், அவர் நீர் சொல்லும் பிரபோதங்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஸ்திதியில் இருப்பார். எந்த வியாதியையும் காந்தசக்தியின் வைத்தியத்தினலோ, மருந்தினலோ அல்லது எவ்விதவைத்தியத்தினலோ சொஸ்தம் செய்வதில், பிரபோதமே முக்கியமான அம்சமாக இருக்கிறது.

(3) நோயாளியின் தலையின்பக்கத்தில் விரல்களை வைத்து, உமது பெருவிரல்களைக் கண்ணுக்குச் சற்று மேலாக அவர்நெற்றியின்மீது இருபெருவிரல்களும் ஒன்றையொன்று தொடுமாறு வைத்துக்கொள்ளவேண்டும். (2-ஆவது நம்பர் படத்தைப் பார்க்கவும்)பிறகு, பெருவிரல்களை நெற்றியின் நடுவிலிருந்து வெளிப்புறமாக மெதுவாக இழுத்துச்சென்று, கன்னப்பொறியின்மீது கொண்டுபோகவும். இவ்வாறு, இரண்டு அல்லது மூன்று நிமிஷநேரம் செய்யவும். மற்ற விரல்களைச் சும்மா வைத்திருக்கவும். பெருவிரல்களை இழுக்கும்போது, "தூங்குவாய்; தூக்க மயக்கம் வருகிறது; வந்துகோண்டிருக்கிறது; கிட்டிவிட்டது; இதோ வந்துவிட்டது; தூங்குவாய்; அயர்ந்து தூங்குவாய்" என்று சொல்லவேண்டும். பேசும்போது, மெதுவாகவும் நிச்சயமாகவும் சமக்குரலாகவும் பேசவேண்டும்.

(4) நோயாளிக்கு வலப்பக்கத்தில் நின்றுகொண்டு, உமது இடக்கைப் பெருவிரலை அவரது மூக்கின் அடிப்பாகத்தில் வைத்து, இடக்கைவிரல்களை அவரது உச்சந்தலையில் வைக்கவும். உமது வலக்கையானது பக்கத்தில் தொங்கிக் கொண்டிருக்கலாம். (3-ஆவது நம்பர் படத்தைப் பார்க்கவும்.) தூக்கம் வருவிக்கும் வார்த்தைகளை உச்சரிக்கவும்; மெதுவாகவும் நிச்சயமாகவும் சமக்குரலாகவும் உச்சரிக்கவும்.

(5) விரல்களின் முதற்கணுக்களுக்கும் நகங்களுக்கும் மத்தியில் நகத்தின் மூலத்தை அழுத்துவதனுல் ஒருவனைத் தூங்கச்செய்யலாம்.

(6) நோயாளியினது கண்ணிற்குள் நேராக உற்றுப்பார்த்துக்கொண்டே "ஒன்று, இரண்டு, மூன்று ......" என்று எண்களை முறையே எண்ணி, அப்படி நீர் ஒவ்வொருஎண் எண்ணினவுடனும் நோயாளியைக் கண்ணை இமைக்கச் சொல்லுவதனுல் அவனைத் தூங்கச்செய்யலாம்.

(7) விரல்களின் நுனிகளை அழுத்துவதனுல் ஒருவனைத் தூங்கச்செய்யலாம்.

(8) நோயாளியின் உச்சந்தலையில் மெதுவாகத் தட்டுவதனுல் அவனைத் தூங்கச்செய்யலாம்.

(9) இருதயமிருக்கும் இடத்தைச்சுற்றி வட்டமாகச் சுற்றும் பாவனையினுல் ஒருவனைத் தூங்கச்செய்யலாம்.

(10) மூக்கின் அடிப்பாகத்தின் இருபக்கங்களிலும் கண்களின் ஓரங்களிலும் மெதுவாக அழுத்துவதனுல் ஒருவனைத் தூங்கச்செய்யலாம்.

(11) கண்களை மூடிக்கொள்ளச் சொல்லி, சற்று மெதுவாக அழுத்துவதனுல் ஒருவனைத் தூங்கச்செய்யலாம்.

(12) நோயாளியின் அன்னுசயத்தின்மீது ஓர் வெப்பமான துணியைப் போடுவதனுல் அவனைத் தூங்கச் செய்யலாம்.

(13) வலக்கையை நோயாளியின் தலைமீது வைத்து, இடக்கையினுல் நோயாளியின் முதுகெலும்புக்கு மேலாகத் தடவுவதுபோல் பாவனைசெய்வதனுல், அவனைத் தூங்கச்செய்யலாம்.

(14) மூன்றுவிரல்களினால், நோயாளியின் தலையை, மேலிருந்துகீழாகத் தடவிக்கொடுப்பதனால் அவனைத்தூங்கச்செய்யலாம்.

(15) நோயாளியைப் பல எண்ணங்களை யெண்ண விடாது ஒரேநினைப்பில் இருக்கச் செய்வதனாலும் தூங்கச் செய்யலாம்.

மனோவசிய தத்துவத்தினால் தூக்கமடைந்தவனை எழுப்பும் விதம்:—

தூக்கம் வருவிப்பதற்கு எவ்வளவுசாதுர்யம் வேண்டுமோ அவ்வளவு சாதுர்யம், தூக்கத்தைப் போக்குதற்கும் வேண்டும். இச்சாதுர்யம் வழக்கத்தினால் உண்டாகும். மேலிருந்து கீழ்வரும்பாவனைகள், தூக்கத்தை வருவிக்கும். (4-ஆவது நம்பர் படத்தைப் பார்க்கவும்.) கீழிருந்துமேலே போகும் பாவனைகள் தூக்கத்தைப் போக்கும். (5-ஆவது நம்பர் படத்தைப் பார்க்கவும்.) அநேகர்விஷயத்தில் தூக்கந்தெளிவிப்பதற்கு, "எழுந்திரு; விழித்துக்கொள்; சரிசரி; எழுந்திரு" என்றாலே போதும். எழுப்புவதற்கு உமது கையைக் கொட்டிச் சப்தம்செய்யலாம். நோயாளியானவன் தூக்கந்தெளிந்து நன்றாக விழித்துக்கொள்ளும் வரையில், கீழிருந்து மேற்புறமாகப் பாவனைகளைச் செய்துகொண்டும், பிரபோதங்களைச் சொல்லிக்கொண்டும் இருக்கவேண்டும். விசிறுவதனாலும் சிலர்விஷயத்தில் பலனுண்டாகும். சிலவேளைகளில், கன்னப்பொறிகளை மேற்புறமாகத் தேய்ப்பதனாலும், மூக்கின் அடிப்பாகத்தை மேற்புறமாகத் தேய்ப்பதனாலும், காலிலுள்ள பாதரகைஷயின் அடிப்பாகத்தைக் கையினாலாவது யாதேனும் ஒரு பொருளினாலாவது தொடுவதனாலுங்கூடத் தூக்கம் தெளியும்.

நோயாளியின் தேகத்தைத் தொடாது செய்யும் கைப்பாவனைகளை, அவனை உட்காரவைத்தாயினும் படுக்க

No. 7.

இப்படமானது, காதுரோகங்களுக்கு வைத்தியம் செய்யும் வழியைக் காட்டுகிறது,

வைத்தாயினும் செய்யலாம். அப்பாவனைகள், உச்சந்தலையில் ஆரம்பித்துக் கீழ்ப்புறமாகச் செல்லவேண்டும். (4-ஆவது நம்பர் படத்தைப் பார்க்கவும்.) உமது விரல்களை நோயாளியின்புறமாக ஒரு அங்குல தூரமாகவோ அல்லது இன்னம் கொஞ்சம் அதிகதூரமாகவோ வளைத்துக்கொண்டு, அப்பாவனைகளை மெதுவாகச் செய்யவேண்டும். அவைகளை முழங்கால்வரையில் கொண்டுபோகலாம். அவ்வாறு செய்தால், நீர், அவரது முழங்காலை மெதுவாகத் தொடவேண்டியிருக்கும். உமக்கு இஷ்டமானால், இருதயத்துக்குச் சற்றுக்கீழாக அவைகளை நிறுத்திக்கொள்ளலாம். பாவனைகளைச் செய்யும்போது, தூக்கம் வருவிக்கத்தக்க பிரபோதங்களைச்சொல்லலாம்; அல்லது, அவைகளைச் சொல்லாமலே பாவனைகளைமட்டும் செய்யலாம். அநேகர் விஷயத்தில் பிரபோதங்களினால் மிகுந்த பலன் உண்டாகும். சில வழிகளினால் சிலர்விஷயத்தில் அதிகபலன் உண்டாகக்கூடும். மற்றவழிகள் பிரயோஜனமற்றவையாகப் போனபிறகு, ஒருவழியினால் ஒருவன் தூக்கமடைவானேல், அதைக்கொண்டு மொத்தமாக அதுவே எல்லா வழிகளிலும் சிறந்ததென்றுவது, மற்றையவழிகள் அவன் விஷயத்தில் பலனற்றவைகளானதைக்கொண்டு அவைகள் பிரயோஜனமற்றவைகள் என்றுவது அனுமானிக்கலாகாது.

நோயாளியின்மனத்தில் உண்டாகும் அபிப்பிராயம் :—

* "எண்ணிய எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்பது பெரியோர் அமுதவாக்காதலால், வைத்தியம் செய்வோர் நோயாளியினிடத்தில், அவர் தமது மனவுறு

* (இதன் பொருள்): தாம் அடைய எண்ணிய பொருள்கள் எல்லாவற்றையும் அவ்வெண்ணியபடியே அடைவர்; எண்ணியவர் அவற்றிற்கு வழியாகிய வினையில் வலிமையையுடையராகப்பெற்றால்.

தியை உபயோகிப்பதனுல் அது அவரது வியாதிக்கு வைத்தியம் செய்வதில் மிகுந்தஉதவி செய்யக்கூடுமென்று சொல்லவேண்டும்; அன்றியும், அவரது வியாதியைச் சொஸ்தமாக்கிக்கொள்ளக்கூடியசக்தி அவரிடத்திலேயே பொருந்தியிருக்கிறதென்றும் சொல்லவேண்டும். மனம் தேகத்தை அடக்கியாளும் சக்தியை உடையதென்றும், அது தன்னுறுதியினுல் நரம்புகளின்மூலமாக நோயடைந்த இந்திரியங்களுக்கும் மற்ற நோயடைந்த பாகங்களுக்கும் காந்த சக்தியை அனுப்பி வியாதியைத் தீர்க்க வல்லதென்றும் நோயாளியினிடத்திற் சொல்லவேண்டும். பின்னும், வியாதியானது, காந்தசக்தி நரம்புசக்தி இவைகளின் குறைவினுலோ, அல்லது சீர்க்கேட்டினுலோ உண்டாகிறதென்றும் அவருக்குத் தெரியப்படுத்தவேண்டும். இவ்விதம் செய்வதனுல், காந்தசக்தியினுல் செய்யும் வைத்தியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அனுகூலமான ஸ்திதிக்கு அவரைக் கொண்டுவரலாம்.

புத்தி :—

தூக்கம் வரச்செய்து பிணிகளைத் தீர்க்க ஆரம்பிப்பதற்கு முந்தியே, என்னசெய்யப்போகிறேம் என்பதை நீர் நன்ருக நிச்சயித்துக்கொள்ளவேண்டும். அப்படி நிச்சயம்செய்யாவிடில், ஒருவேளை, நீர் செய்யவேண்டும் செய்கைகளும் சொல்லவேண்டும் பிரபோதங்களும் மாருட்டமாகப் போகக்கூடும். நீர் ஒருபிழை செய்யும் பொழுது, எல்லாரும் அப்பிழையைக் கவனித்திருப்பாரென்று எண்ணுகிறீர். அதனுல், உமது மனம் சலிக்கக் கூடும். நோயாளிகளும், கூடஇருப்பவர்களும், ஏதாவது நீர் பிழைசெய்தால் அதைத் தெரிந்துகொள்ளக் கூடுமளவு இச்சாஸ்திரங்களிற் பரிசயமுள்ளவர்களல்லர். ஆதலினுல், நீர், எவ்வளவுபிழைகளைச் செய்தாலும்

அவைகளை ஒருவரும் அறியமாட்டாரென்பதை நீர் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்; ஏனெனில், அது உமக்கு மிகவும் உதவியைத் தரக்கூடியது. நீர் ஒருபிழை செய்தால், செய்ததாகவே காட்டிக்கொள்ளாது, மேல்காரியத்தை நடத்தவேண்டும். அதை ஒருவரும் கவனித்தறியமாட்டார்கள். உமது திறமையைக்குறித்துப் பெருமையாகப் பேசிக்கொள்ளாமல், உமது வேலையை நீர் சாதாரணமாகச் செய்வீராகில், நீர் காரியசித்தி யடைவதற்குத் தடையே யில்லை. நோயாளிகளுக்குத் தினம் இரண்டுமுறை இவ்விதமாக வைத்தியம் செய்யவேண்டும்.

மனம் :—

மனம் என்பது இருகுணமுடையது. அதன் இரு பாகங்களில் ஒன்று, தலையின் மேற்பாகத்திலும், மற்றொன்று தலையின் பின்பாகத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. முற்கூறியது 'விஷயகபுத்தி' (Objective Mind) எனப்படும். அது, யோசனைசக்தி, பகுத்தாராய்ச்சிசெய்யுந் திறமை, மனோநீதிகுணங்கள் ஆகிய இவைகளெல்லாம் பொருந்தியது; அது, பஞ்சேந்திரியங்களின் மூலமாக விஷயங்களை அறிந்து கொள்ளும். பிற்கூறியது, 'ஸ்வபுத்தி' (Subjective Mind) எனப்படும். சரீரத்தின் செய்கைக ளெல்லாவற்றையும் நடத்துகிறது இதுவே. சுவாசம், இரத்தவோட்டம், ஜீர்ணம், ஆஹாரத்தைப் பக்குவமாகக் கிரகித்துக்கொண்டு தேகத்தின் பலபாகங்களுக்குப் பிரித்து அனுப்புதல், விஸர்ஜன இந்திரியங்கள் (Excretory organs) தசைநார்க்கட்டுகள், நரம்புக்கூட்டங்கள் ஆகிய இவைகளெல்லாம், நேரே இதன் அதிகாரத்திற்கு உட்பட்டவைகள். தேகத்திலுள்ள இந்திரியங்களில் யாதாயினும் ஒன்றுக்குச் செல்லும் இரத்தத்தை அதிகரிப்பிக்கவும் குறைக்கவும் இதற்குச்

No. 8.

இப்படமானது, ஈரல் பிருக்கம் ஆகிய இவைகளைப்பற்றிய வியாதிகளைத் தீர்க்கும் வழியைக் காட்டுகிறது.

சக்தியுண்டு. அவ்விதமான இரத்தவோட்டத்தின் வேகத்தைக்குறைக்கவும் அதிகரிப்பிக்கவுங்கூட இதற்குச் சக்தியுண்டு. ஆகையினல், தேகத்தில் ஏதாயினும் ஓர்பாகத்தில் உள்ள வேக்காட்டை இது அதிகரிப்பிக்கவுங்கூடும்; தணிக்கவுங்கூடும். இது, தனது இஷ்டம்போல் தசைநார்க்கட்டுக்களை இறுக்கவும் தளர்த்தவும் வல்லது. இது, எதையும் எளிதில் நம்பும்சுபாவமுடையது. விஷயகபுத்தியானது, நித்திரையிலிருக்கும்போதாவது அல்லது செயலற்றிருக்கும்போதாவது தனக்கு எதைப் போதித்தபோதிலும் அதை ஏற்றுக்கொண்டு, நம்பி, அதன்படி நடந்துகொள்ளும். அந்தப்புத்தி ஜாக்கிரதையாயிருக்குங் காலத்திலும், இந்தப்புத்திதான் முன் ஏற்றுக்கொண்ட போதனையை அனுசரித்துப் பலமுறை நடந்துகொண்டிருக்கிறது. இப்புத்திக்கு நித்திரையென்பது இல்லை. இது நித்திரைபோகுமாயின், தேகத்தினது செயல்களெல்லாம் ஓய்ந்துபோய், மரணம் சம்பவிக்கும். ஸ்வபுத்தியானது, பஞ்சஇந்திரியங்களைக் கொண்டும் விஷயக புத்தியைக் கொண்டும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளுகிறது. இவ்வாறு, மனம் இருகுண முடையதாயிருப்பதை ஆதாரமாகக்கொண்டுதான், மனோவசீகரவைத்தியர்கள் (Mental Healers) தேகத்திலுள்ள வியாதிகளைக்களைந்து, ஆரோக்கியத்தைத் தரக்கூடிய பொருள்கள் தேகத்தில் உண்டாகுமாறு செய்ய முயலுகிறார்கள். ஒவ்வொருவரிடத்திலும் சிலசக்திகள் மறைந்துகிடக்கின்றனவென்றும், அச்சக்திகளினல் மனிததேகத்தைப் பீடிக்கக்கூடிய எல்லா வியாதிகளையும் தீர்த்துவிட முடியுமென்றும், இயற்கையான வழிகளினல் பிணிதீர்த்தல் அல்லது இயற்கை வைத்தியம் என்று வழக்கமாய்க் கூறப்படுவதானது உண்மையாகவே தேகமானது ஸ்வபுத்தியின் உதவியினல்

தனது பிணியைத் தீர்த்துக்கொள்ள முயலுவதுதான் என்றும் பெரியோர் வற்புறுத்திக் கூறியுள்ளார். இப்புத்தி, தேகத்தின் எல்லாத்தொழில்களையும் நடத்தும் அதிகாரம் வாய்ந்ததாகையினுல், அவ்வாறு வைத்தியம்செய்வதற்கு அனுகூலமும் செய்யக்கூடும்; தடையும் செய்யக்கூடும். ஆகையினுல், மனோவசீகரண வைத்தியம் செய்வதென்பது, ஸ்வபுத்திக்குச் சரியான போதனைசெய்வதன்மூலமாக அதைப் பிணிதீர்க்கும்விஷயத்தில் முயன்று, ஜீவாதாரப்பொசிவுநாடி (Lymph) என்பதன்மூலமாயும், விஸர்ஜன இந்திரியங்களின்மூலமாயும், தேகத்திலிருந்து உயிரற்ற அணுக்களையும், பலனழிந்து பிரயோஜனமற்றவையான வஸ்துக்களையும் நீக்கி, அவைகள் இருந்தவிடங்களில் புதிய வஸ்துக்கள் உண்டாகுமாறு புதிதாயும் ஆரோக்கியத்தைத் தரத்தக்கதாயுமுள்ள இரத்தத்தை வேண்டியவளவு தேகத்தில் ஓடச்செய்விப்பதுதான்.

பிரபோதனையென்னும் பதம், ஸ்வபுத்திக்குச் சொல்லும் போதனையைக் குறிக்கும். இப்பிரபோதனையை வாய் வார்த்தையினுலாவது, மனதினுலேயேயாவது செய்யலாம். அப்பிரபோதனையை ஒருவன் தனக்குத்தானேகூடச் செய்துகொள்ளலாம். அது சுயப்பிரபோதனை யெனப்படும். அது வேறொருவராலும் செய்யப்படலாம். அவர் பக்கத்தில் இருப்பவராயுமிருக்கலாம்; பக்கத்தில் இல்லாதவராயுமிருக்கலாம். பிரபோதனைக்குத் தூரமானது ஓர் தடையாகமாட்டாது. வைத்தியம்செய்பவர் நோயாளியின் பக்கத்தில் இல்லாவிட்டாலும், அவர்கள் இருவரும் பக்கத்தில் இருந்தால் எவ்வளவு சீக்கிரமாக நோய்தீர்க்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகவே நோய்தீர்க்கமுடியும்.

விவேகவிஷயத்திலும் மனோவசீகரணவைத்தியத்தினுல் அடைந்துள்ள பலன்கள் எவ்விதத்திலும் குறைந்த

வைகளல்ல. மூளையானது, ஒன்றற்கொன்று சம்பந்தமின்றித் தனித்தனியாயுள்ள அநேகசக்திகள் நிறைந்துள்ளது. ஒவ்வொருவரிடமும் இச்சக்திகள் அதிகமாகவோ குறைவாகவோ மறைந்திருக்கின்றன. இலந்தைமரத்தினது இலையின் காம்பின்மேலே எழும்பாத ஓர் மொக்கு இருக்கிறது. அப்படியே விட்டுவிட்டால், அது, ஒருநாளும் வளர்ச்சியடையாது. ஆனால், அதற்கு அடுத்தாற்போல் மேலே உள்ள கிளையை வெட்டிவிட்டால், தடைப்பட்டிருந்த ஜீவாதாரமானது அதற்குச்சென்று அதனால் அம்மொக்கு, உடனே பருத்து வளர ஆரம்பிக்கும். அம்மாதிரியாகவே, மறைந்துள்ள சக்திகளில் சில, அவைகளை விருத்தி செய்வதற்கு விசேஷமுயற்சியைச் செய்யாவிடில், செயல்ரூபமாய் வெளிப்படாமலேபோய்விடும். ஸ்வபுத்தியானது இரத்தவோட்டத்தையும் இரத்தப்பரவுதலையும் செலுத்தும் வல்லமையுடையது. ஆகையால், யாதாயினும் ஒரு சக்திக்கு அனுப்பும் இரத்தத்தை நிறுத்திக்கொண்டு மற்றொரு சக்தியை வளர்த்து விருத்திசெய்யவேண்டுவதற்காக அதற்கு அதிக ரத்தத்தை அனுப்பக்கூடும். ஒருவன் படபடப்புள்ளவனும் முன்கோபியாயும், இருப்பானேயாகில், போராடும் குணத்தைத்தரும் சக்திக்குச் செலுத்தும் இரத்தத்தைக் குறைப்பதனால் அவனது குணத்தைத் திருத்தமுடியும். ஒருவன் கூச்சமுள்ளவனும், பயந்த சுபாவமுள்ளவனும் இருப்பானேயாகில், அவன், தன்னம்பிக்கை, போராடும் குணம் இவைகளைத் தரத்தக்கவைகளாயும் முன்கூறிய அவனது குணங்களுக்கு விரோதமானவைகளாயுமுள்ள சக்திகளை விருத்திசெய்வதனால், தன்னம்பிக்கையினால் மனவமைதியை யடைந்து தைரியசாலியாய் ஆவான்.

ஒருவனது வாழ்நாளில் ஏற்படக்கூடிய ஒவ்வொரு எண்ணமும், வார்த்தையும், செயலும் மூளையில் எழுதப்

No. 9

இப்படமானது, குடலைப்பற்றிய வியாதிகளையும், மற்றும் அடிவயிற்றைப்பற்றிய வியாதிகளையும் தீர்க்க வைத்தியம்செய்யும் வழியைக் காட்டுகிறது.

பட்டு, மூளை இருக்கும் காலம்வரையில் அழியாது நிலைத்திருக்கும். ஸ்வபுத்தியானது ஒருபொழுதும் ஒருவிஷயத்தையும் மறப்பதில்லை. ஆகையினால், அப்புத்தியைத் தகுந்த ஸ்திதியில் வைப்போமாகில், வாழ்நாளில் நடந்த எவ்விஷயத்தையும் நினைவுக்குக்கொண்டுவருமாறு செய்யலாம். இதன் சக்தியினால், குழந்தைப்பருவத்தில் நடந்த விஷயங்களெல்லாம், வெகுகாலமாய் மறக்கப்பட்டிருந்தபோதிலும், நமது மனக்கண்ணுக்குமுன்னே திரும்பவும் நடப்பவைபோல் காட்டப்படுகின்றன.

முக்கியக் கவனிப்பு:—

விசேஷமாக எல்லாக்கரண சம்பந்தமான வியாதிகளும், நரம்பைப்பற்றிய வியாதிகளும், இந்திரியங்களைப் பற்றிய வியாதிகளும் காந்தசக்தியை உபயோகித்துச் செய்யும் வைத்தியத்தினால் தீர்க்கக்கூடியவைகள். சற்றேறக்குறைய எல்லாவியாதிகளுக்கும் இவ்வைத்தியத்தினால் குணமுண்டாகும். இப்புஸ்தகத்தில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் உமக்குச் சிறிதும் விசேஷமற்றவையாகத் தோன்றினாலும், மிகவும் சாதாரணமானதாகத்தோன்றினாலும், அவைகளில் ஒன்றையும் விடாது அநுஷ்டிக்க வேண்டுமென்று மனதில் உறுதிசெய்துகொள்ளவேண்டும். ஒருவிஷயத்தையும், அதை நன்றாகப் பரீக்ஷித்தறியுமுன் இகழக்கூடாது. இவ்வுலகில் மிகவும்பெரிய விஷயங்களே கடைசியில் மிகவும் சாதாரணமானவைகளாயிருக்கவில்லையா? இப்புஸ்தகத்திலுள்ள விதிகளை அநுஷ்டித்தால் நிச்சயமாக அடையலாமென்று சொல்லியுள்ள மிகவும் ஆச்சரியப்படத்தக்க பலன்களை அவைகள் தராவென்று சொல்லத்தகுந்தவளவு அவைகள் மிகவும் சாதாரணமாக இருக்கின்றனவென்று நீர் நினைக்கக்கூடும். ஆனால், அவைகளைத் தவறாது அநுஷ்டித்து நன்றாகப்

பரீக்ஷித்துப்பார்ப்பீராயின், யாம் புகழ்வதைக்காட்டிலும் நீர் அவைகளைப்பற்றி இன்னம் அதிகமாகப் புகழ்வீர் என்பதற்கு ஐயமில்லை. இதிற் கூறியுள்ள வழிகள், படிக்கத்தெரிந்தவர்கள் எல்லாரும் கற்றுக்கொள்ளத் தக்கவாறு மிகவும் எளியனவாய் இருக்கின்றன. இப்புஸ்தகத்தில் கூறியுள்ளவழிகளே, மிகவும்சிறந்த பலன்களைத் தரக்கூடியவைகளாய் இருக்கின்றன. வழிகள் எவ்வளவு அற்பமாகத்தோன்றினுலென்ன? அவைகளினுல் ஏற்படக்கூடிய பலன்களையன்றே நாம் பிரதானமாகக் கருதவேண்டும். நோயாளி நோய்தீருவது பிரதானமென்று கவனிப்பானே யொழிய, அது எவ்வழியினுல் தீர்க்கப்படுகிறது என்பதைப்பற்றிக் கவனிக்கவேமாட்டான். இவ்வைத்திய முறைகளில் ஒன்ருவது எப்போதும் தவருது காரியசித்தியைக்கொடுக்கக்கூடியது அன்று. ஆனுல், மருந்தினுல் தீர்க்கமுடியாத ரோகங்களையுடைய ஆயிரக்கணக்கான ஜனங்கள் இவைகளினுல் சௌக்கியம் அடைந்திருக்கிருர்கள். மனிதனுக்கு இதுவரையில் தெரிந்தவைகளுக்குள் இதுதான், மிகவும் சிறந்ததாகவும் பலமுள்ளதாகவும் இருக்கின்றது. இதனுல் செய்யக்கூடிய நன்மையோ அளவற்றது. அந்நன்மையைச் செய்வதற்கு இடமோ எல்லையில்லாதது. இவ்விஷயங்களில் இதற்குச் சமானமானது ஒன்றும் கிடையாது. இயற்கையின்சக்திகளை உண்மையாக அறிந்து சரியாக உபயோகப்படுத்தியிருந்தால், அகாலமரணத்தை யடைந்த ஆயிரக்கணக்கான ஜனங்கள் இன்னம் ஜீவித்திருப்பார்கள். அநேகர் இவ்வழிகளின் பிரயோஜனத்தை அறியமாட்டாதவர்களாய், இவைகளை மனோராஜ்யம் செய்பவனுடைய எண்ணங்களாகக் கருதுகிருர்கள். அவர்கள், மானிடதேகத்தின் சுபாவத்தையும், அதன்மீது மனது செலுத்தும் சக்தியையும் நன்ருக உணர்வாராயின், இவ்வாறுசொல்லி, தங்களுடைய

அறிவீனத்தை வெளியிட்டுத் தங்களைப் பரிகாசத்துக்குப் பாத்திரர்களாக்கிக் கொள்ளமாட்டார்கள். பிராணி தரும குண சாஸ்திரத்தையும், ஆத்மதத்துவ சாஸ்திரத்தையும் (Psychology) அறிந்த எந்தவைத்தியனும், அவன் யோக்கியனுக இருப்பானேல், இவ்வழிகளினுல் வியாதிகள் சொஸ்தமாகிற சங்கதியை மறுக்கவேமாட்டான்; நிச்சயமாக அச்சங்கதியை அவன் ஒப்புக்கொள்ளுவான். மருந்தினுல் தீர்க்க முடியாமல் கைவிடப்பட்ட நோயாளிகள் பலர்க்கு இவ்வழியினுல் வியாதி தீர்ந்திருக்கிறதென்பதையும் அவன் மறுக்கமுடியாது. "நான் காரியசித்தியடைவேன்" என்று நீர் மனதில் நிச்சயித்துக்கொள்வீராகில், உமக்குக் காரியசித்தி யுண்டாவதற்குத் தடையொன்றுமில்லை. அநுஷ்டானமும் விடாமுயற்சியும்தான் ஜயமடைவதற்கு அவசியமானவை.

நீர், விதிகளையும் வழிகளையும் மெதுவாகவும், ஜாக்கிரதையாகவும் பலமுறை படித்து, ஒவ்வொருவழியும் நன்ருகத் தெரியும்வரை அவைகளைத் துறையுடன் பயின்று, சிறிது மனவுறுதியோ அல்லது ஊக்கமோ உடையவராயும் இருப்பீராயின், நீர் காரியசித்தியடைவதற்கு ஐயமில்லை. "ஒன்றும் ஒன்றும் இரண்டு" என்பது எவ்வளவு நிச்சயமோ உமக்கு ஜயமுண்டாவதும் அவ்வளவு நிச்சயம். நீர் எதிர்பார்க்கும் ஜயம் உமக்குக் கிட்டாவிடில், நான் கூறியவிதிகளைச் சரியாக அநுஷ்டிக்காததே அதன் காரணமாக இருக்கும். இப்புஸ்தகத்தில் இங்குமங்குமுள்ள படங்களில் காணும் நிலைகளை ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும். அவைகளை நன்ருக அறிந்துகொண்டால், இப்புஸ்தகத்திலுள்ள விஷயங்களை எளிதில் அறிந்துகொள்ளக்கூடும். காந்தசக்தியினுல் செய்யும் வைத்தியத்தைப் பற்றிய இப்புஸ்தகம், உலகத்தாருக்குத் தற்காலத்தில்

No. 10.

இப்படமானது, அதிக உதிரப்பெருக்கு, கருப்பையானது தன்னிலையிலிருந்து வீழ்தல் முதலியவைகளுக்கு வைத்தியம்செய்யும் வழியைக் காட்டுகிறது.

ஏற்பட்டிருக்கும் ஆசையைப் பரிபூர்த்திசெய்வதற்காகத்தான் எழுதப்பட்டிருக்கிறது. இதைப்படிப்போர், இதிற் குறித்துள்ள விதிகளை அநுஷ்டித்தால், அவர்கள் அடையும் பலனானது அவர்களுக்கு மிகவும் திருப்திகரமாகவே யிருக்குமென்பது திண்ணம். இப்பூலோகத்தில் இயற்கையாக ஏற்பட்ட விதிகளை மீறிநடந்து, தனது ஆரோக்கியத்தைத் திரும்பவும் அடைவதற்கு இயற்கையாக ஏற்பட்ட வழிகளை அநுசரிக்கமாட்டேன் என்று மூர்க்கத்தனமாக இருப்பவன் அகாலமரணம் அடையக்கூடும் என்று எண்ணுவது சகஜம்தானே. ஆகையினால், நீர் ஜயம் என்பது இருக்கும் பெட்டியின் திறவுகோலைச் சம்பாதித்து உயர்ந்த ஸ்திதியையும், செல்வத்தையும் அடைய விரும்புகிறீரா? அல்லது, சாதாரண ஜனங்களிலொருவராய்க் கஷ்டஜீவனம்செய்து, தரித்திர தசையில் கீர்த்தியும் கண்ணியமுமின்றி இறக்க விரும்புகிறீரா? என்பதைத் தீர்மானித்துக்கொள்ளவேண்டியது நீர்தான்.

* "முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்திவிடும்" (திருக்குறள்)

---

* (இதன் பொருள்): முயற்சி செல்வத்தை வளர்க்கும்; அம்முயற்சியில்லாமை தரித்திரத்தைக் கொடுக்கும்.

காந்தசக்தியினுல் பலவியாதிகளைத் தீர்க்கும் விதம்.

முகத்தின் நரம்புக் குத்தல்.

நோயாளிக்கு முகத்தில் எந்தப்புறத்தில் குத்தல் வலி இருக்கிறதோ அந்தப்புறத்தில் கைப்பாவனைகளைச் செய்வது சௌகரியமாக இருக்கும்வண்ணம், நோயாளியைப் படுக்கும்படிசெய்யவும். அவனைக் கண்ணை மூடிக் கொள்ளச்சொல்லி, தமது குத்தல்வலியானது காந்தசக்தியினுல் தீர்ந்துவிடுமென்று மனதில் உறுதியாக நினைத்துக்கொள்ளும்படி சொல்லவும். வேறுவித எண்ணங்களைத் தம்மனதில் புகவிடாமல் இதைப்பற்றியே நினைத்துக்கொண்டிருக்கும்படி சொல்லவும். குத்தல்வலியிருக்குமிடத்தை உற்றுநோக்கி, உமது மனதை அடக்கி அதன் மீது செலுத்தி, அக்குத்தல்வலியானது அந்நோயாளியை விட்டகலவேண்டுமென்று மனவுறுதியுடன் நினைக்கவும். நோயாளியின் உச்சந்தலையில் ஆரம்பித்துக் கீழ்ப்புறமாகக் கன்னத்தெலும்புகளின்மேலாக (முகத்தின் இருபக்கத்திலும்) மோவாய்க்கட்டைவரையில் கையினுல் தடவுவது போல் பாவனைசெய்து, ஒவ்வொருதரம் அவ்வாறு செய்த பிறகும் கைகளை உதறிவிடவேண்டும். முகத்தின் எந்தப் பக்கத்தில் குத்தலிருக்கிறதோ, அந்தப்புறத்திலுள்ள காதிற்குள், உஷ்ணமான மூச்சை வாயினுல் விடவேண்டும். சாதாரணமான கைப்பாவனைகளைச் செய்தபின், இரண்டு நிமிஷநேரம் துடிப்பதுபோன்ற பாவனையைச் செய்ய வேண்டும். நோயாளிக்கு, நல்ல பெரிய ஆழ்ந்த மூச்சை உட்கொண்டு சீக்கிரம் அதை வெளிவிடும்படி சொல்லவும். அவனை இவ்வாறு மூன்றுதரம் செய்யச் சொல்லவும். இவ்வாறு செய்வதெல்லாம் பத்துநிமிஷத்தில் முடிய வேண்டும்.

தலைவலி.

சாதாரண நாற்காலியொன்றில் நோயாளியை உட்காரச்சொல்லவும். நீர், அவருக்குப் பின்புறத்தில் நின்றுகொண்டு, அவருடைய தலை உமது சரீரத்தின்மீது சாய்ந்துபொருந்தும்படி வைத்துக்கொள்ளவும். சில நிமிஷநேரம் இரண்டுகைகளினாலும் அவர்நெற்றியின்குறுக்கே தடவுவதுபோலப் பாவனைசெய்து, காதுகளின் மேற்புறமாகக் கைகளை எடுத்துவிடவேண்டும். (6-ஆவது நம்பர் படத்தைப் பார்க்கவும்.) இவ்வாறு சாதாரணபாவனைகளைச் செய்தபின், இரண்டுநிமிஷநேரம் துடிப்பதுபோன்ற பாவனைகளைச் செய்யவும். தலையின் முன்புறத்திலும், பின்புறத்திலும், இருபக்கங்களிலும் நன்றாக அழுத்தவும். நோயாளிக்கு, பெரிய ஆழ்ந்த மூச்சை உட்கொண்டு அம்மூச்சைச் சீக்கிரத்தில் வெளிவிடும்படி சொல்லவும். இவ்வாறு மூன்றுதரம் செய்யச் சொல்லவும். பிறகு, நோயாளியின்முன்னேபோய் நின்றுகொண்டு, உமது கைகளைத் திடீரெனப் பலமாகக் கொட்டி, அவனைக் கண்களை விழித்துக்கொள்ளும்படி சொல்லி, அவனை உற்றுப் பார்த்தவண்ணமாக, உமது சக்தியில் உமக்கு மிகுந்த நம்பிக்கை உண்டென்பதைக் குறிக்கும் முகத்துடன், தைரியமாக, "இப்பொழுது வலி குறைந்திருக்கிறதன்றோ?" என்று கேட்கவேண்டும்.

(2) தலைவலியைத் தீர்ப்பதற்கு, நோயாளியின் தலைமீது உமது கைகளைச்சிலநிமிஷநேரம்வரையில் வைத்திருக்கவும். பிறகு, கைகளினால் தடவுவதுபோலப் பாவனைகளைச் செய்து, கைகால்களின்மேலாகத் திரும்பவும் திரும்பவும் கைகளினால் தடவுவதுபோலப் பாவனைகளைச் செய்யவும். பிறகு, கால்கள் உஷ்ணமடைந்து, தலைவலி தீரும். கடைசியாக, நோயாளி, பெரிய ஆழ்ந்த மூச்சை மூக்கினால்

No. 11.

இப்படமானது, இருதயவியாதிகளுக்கு வைத்தியம்செய்யும் வழியைக் காட்டுகிறது.

உட்கொண்டு அதை விரைவாக வாயினல் வெளிவிடும்படி அவர்க்குச் சொல்லவும்.

(3) நோயாளியைச் சௌகரியமாக ஓர் நாற்காலியின் மீது உட்காரச்செய்து, அவர்க்கு, தம் தேகத்தைத் தளர்ந்த ஸ்திதியில் வைத்துக்கொள்ளும்படி சொல்லவும். பிறகு, ஒரு கைக்குட்டையை அநேக மடிப்புக்களாக மடித்து, அதை, நோயுள்ள இடத்தின்மீது வைக்கவேண்டும். பிறகு, நாசித்துவாரங்களின்வழியாகக் காற்றை உட்கொண்டு, அதை வாயினல் பலமாகக் கைக்குட்டையினூடே ஊதவும். இவ்வாறு, குறைந்தபக்ஷம் ஆறுதரமாவது செய்யவும்.

(4) நோயாளிக்கு, குப்புறப் படுத்துக்கொண்டு தனது தலையைத் தனது கைகளின்மீது வைத்துக்கொள்ளும்படி சொல்லவும். பிறகு, கண்களை மூடிக்கொண்டு கூடியவரையில் தனது தசைநார்க்கட்டுக்களைத் தளர்த்திக் கொள்ளச் சொல்லவும். பிறகு, உமதுவலக்கையை நோயாளியின் தலைமீது வைத்து, உமது மனவுறுதியினுடைய எல்லாவற்றையும் ஜயிக்கவல்ல முயற்சிகொண்டு, தலைவலியை விரட்டவேண்டுமென்று, ஸ்திரமான மனதுடன் நினைக்கவும்.

(5) கண்களை மூடிக்கொள்ளும்படி நோயாளிக்குச் சொல்லி, அவனது நெற்றியின்மீது உமது வலக்கையையும், அவனது தலையின் பின்புறத்தில் உமது இடக்கையையும் வைத்துக்கொண்டு, சில க்ஷணநேரம் தலையை மெதுவாகவும் சமமாகவும் உறுதியாகவும் அழுத்தி, பிறகு, ஒரு கையை உச்சந்தலையின்மீதும், மற்றொன்றை நெற்றியின்மீதும் வைத்து, மறுபடியும் மெதுவாக அழுத்தி, பிறகு, உமது விரல்களை அவரது தலையின் இருபக்கங்களிலும், பெருவிரல்களை அவைகளின் நுனிகள் ஒன்றை

யொன்று தொடுமாறு கண்களுக்கு மேலாக நெற்றியின் மீதும் வைத்து, மூன்றுநிமிஷநேரம் பெரு விரல்களை மெதுவாக நெற்றியின் மத்தியிலிருந்து வெளிப்புறமாகக் கன்னப்பொறிகளின்வரை இழுத்துவிட்டு, பிறகு, தலையின் முன்புறத்திலும் பின்புறத்திலும் முன்போல அழுத்தவும். பிறகு, நோயாளிக்குப் பின்புறத்தில் நின்றுகொண்டு, உமது கைவிரல்கள் அவரது நெற்றியின் மத்தியைத் தொடுமாறு அவர்நெற்றியின்மீது உமது கைகளை வைத்து, மேலிருந்து கீழ்ப்புறமாகக் கன்னப்பொறிவரை தடவுவதுபோலப் பாவனைசெய்து, ஒவ்வொருபாவனைக்குப்பிறகும் கைகளைத் தலையிலிருந்து அப்பால் எடுத்து உதறவும். இவ்வாறு மெதுவாகத் திரும்பத்திரும்பச் செய்யவும். பிறகு, அவருக்குமுன்னால் நின்றுகொண்டு, கைவிரல்கள் ஒன்றையொன்று தொடுமாறு அவர்நெற்றியின்மீது உமது கைகளை வைத்துக்கொண்டு, அவர்க்கு, பெரிய மூச்சை மூக்கினால் உட்கொண்டு சீக்கிரமாக வாயினால் வெளிவிடும்படி சொல்லவும். அவர் மூச்சுவிடும்போது, உமது இருகைகளையும் நெற்றியிலிருந்து கன்னப்பொறிகளின்பக்கமாக எடுத்து உதறவும்.இவ்வாறு மூன்றுதரம் செய்யவும். பிறகு, நோயாளியின் முகத்திற்குமுன்பு, விரைவாக உமது கைகளை ஆட்டவும். இவ்வாறு செய்வதனால் நோயாளிக்கு மிகுந்த குளிர்ச்சியும், அதனால் சிரமப்பரிகாரமும் உண்டாகும். பிறகு, அவரிடம், "நீர் கண்ணைத் திறக்கும்போது, உமக்கு வலி குறைந்திருக்கும். நான் மூன்று என்று எண்ணும்போது, நீர் விழித்துக்கொள்ளவேண்டும்" என்று சொல்லவும். பிறகு, "ஒன்று, இரண்டு, மூன்று, உமது கண்களைத் திறவும். உமது தலைவலி குறைந்துவிட்டது" என்று சொல்லவும். எழுந்து சிறிது நடக்கும்படி நோயாளிக்குச் சொல்லவும். இம்முறையைச் சரியாக அநுஷ்டித்தால், விசேஷமாக

எவ்விதத் தலைவலியும் நீங்கும். நீர் குணம்செய்வதைப் பார்த்தால் உமக்கே ஆச்சரியம் உண்டாகும். இவ்வாறு செய்வதனல் தலைவலி நீங்காவிட்டால், தலைவலி எங்கேயிருக்கிறதென்று தெரிந்துகொண்டு, கனமாக மடித்த துணியையோ அல்லது கைக்குட்டையையோ அவ்விடத்தின்மீது போட்டு, மூக்கினல் மூச்சை உட்கொண்டு உஷ்ணமான மூச்சை வாயினல் விட்டு அத்துணியினூடே அல்லது கைக்குட்டையினூடே ஊதவும். இவ்வாறு பலமுறை செய்யவும்.

பல்வலி

நோயாளியானவன் ஒரு நாற்காலியில் படுத்துக்கொண்டாவது உட்கார்ந்துகொண்டாவது இருக்கவேண்டும். வலியுள்ள பல்லானது முகத்தில் எந்தப்புறத்திலிருக்கிறதோ, அந்தப்புறத்தில், மேலாக இரண்டுகைகளினலும் தடவுவதுபோல் பாவனை செய்யவேண்டும். பிறகு, இரண்டுநிமிஷநேரம் துடிப்பதுபோன்ற பாவனைகளையும் செய்யவும். நோயாளிக்கு, பெரிய ஆழ்ந்த மூச்சை உட்கொண்டு, அம்மூச்சைச் சீக்கிரத்தில் வெளிவிடும்படி சொல்லவும். அவனை இவ்வாறு மூன்றுதரம் செய்யச் சொல்லவும். வலியுள்ளபல் முகத்தில் எந்தப்பக்கத்திலிருக்கிறதோ, அந்தப்பக்கத்துக் காதிற்குள், உஷ்ணமான மூச்சை வாயினல் ஊதி வெளிவிடவேண்டும். இவ்வாறு செய்வதெல்லாம், பத்துநிமிஷங்களுக்குள் முடியவேண்டும்.

கண்ணின் உபத்திரவங்கள்

கண்ணுபத்திரவங்களெல்லாவற்றிற்கும் காந்த சக்தியினல் செய்யும் வைத்தியத்தில் ஒரேமுறைதான் ஏற்பட்டிருக்கிறது: நோயாளி படுத்திருக்கவேண்டும். நெற்றியில் ஆரம்பித்துக் கீழ்ப்புறமாகக் கண்களின்மேலாக

No. 12.

இப்படமானது, திமிர்வாதரோகத்திற்கு வைத்தியம்செய்யும் வழியைக் காட்டுகிறது. வைத்தியன் முதுகெலும்பைத் தட்டும் நிலையில் இருக்கிறுன்.

வந்து, மூக்கின் கீழ்ப்பக்கத்துக்கெதிரே முகத்தின் இரு பக்கங்களிலும் இறங்குவதுபோல் இருகைகளினாலும் பாவனைசெய்து, கைகளை உதறிவிடவேண்டும். இரண்டு நிமிஷநேரம் அதேமார்க்கத்தில் துடிப்பதுபோன்ற பாவனைகளையும் செய்யவும். வாயினால் உஷ்ணமான மூச்சை இரண்டு கண்கள்மீதும் ஊதவேண்டும். இவ்வாறு செய்வதெல்லாம் சுமார் பதினைந்து நிமிஷங்களுக்குள் முடியவேண்டும்.

செவிடு

காந்தசக்தியினால் வைத்தியம் செய்வதில், காதைப் பற்றிய எல்லா வியாதிகளுக்கும் ஒரே முறைதான் ஏற்பட்டிருக்கிறது. (7-ஆவது நம்பர் படத்தைப் பார்க்கவும்.) கைகளின் இரண்டாம் விரல்களை இரண்டு காதுகளுக்குள்ளும் விட்டுக்கொண்டு, சில நிமிஷநேரம் துடிப்பதுபோல் ஆட்டவேண்டும். பிறகு, அவ்விரல்களைக் காதுகளிலிருந்து நேராக வெளியே எடுத்து கைகளை உதறிவிடவும். காதுகளுக்குள், உஷ்ணமான மூச்சை மூன்று நான்கு தரம் வாயினால் ஊதி விடவும். பிறகு, நோயாளிக்கு, பெரிய ஆழ்ந்த மூச்சை உட்கொண்டு அம்மூச்சைச் சீக்கிரத்தில் வெளிவிடும்படி சொல்லவும். இவ்வாறு செய்வதெல்லாம் சுமார் பதினைந்து நிமிஷங்களுக்குள் முடியவேண்டும்.

காது நோய்

நோயாளியை நோக்கி, சௌகரியமாக ஓர் நாற்காலியின்மீது உட்கார்ந்துகொண்டு, கண்களை மூடிக்கொண்டு தனது காதுகளுக்குள் ஒவ்வொரு விரலை வைத்துக் கொள்ளும்படி சொல்லவேண்டும். பிறகு, உமது இடக் கைப்பெருவிரலை நோயாளியின் மூக்கின்மீது அவனது இருகண்களுக்கும் இடையே வைத்துக்கொண்டு, உமது

வலக்கையை நோயாளியின் தலைமீது வைக்கவும். நோயாளியின் நோவானது அவனைவிட்டு விலகிற்று என்று மிகுந்த மனவுறுதியுடன் உமது மனதுக்குள்ளேயே பிரபோதகமாகச் சொல்லவேண்டும். இவ்வாறு, குறைந்த பக்ஷம் பத்துநிமிஷநேரமாவது செய்யவேண்டும். பிறகு, நோயாளி தனது நாசித்துவாரங்களின் வழியாக மூச்சை உட்கொண்டு சுவாசத்தை வாய்வழியாக வெளிவிடும்படி சொல்லவும். இவ்வாறு சுமார் மூன்றுதரம் செய்யச் சொல்லவும்.

ஈரல் வியாதிகள்

காந்தசக்தியினால் செய்யும் வைத்தியத்தில், காமாலை (Jaundice) ஈரலில் உதிராதிகரணம் (Congestion of the Liver) முதலான எல்லாவித ஈரல் வியாதிகளுக்கும் ஒரே முறைதான் ஏற்பட்டிருக்கிறது. நோயாளியைக் குப்புறப் படுக்கவைக்கவேண்டும்; அல்லது, நேராக நிறுத்திவைக்கவேண்டும். தேகமுழுவதுமாகக் கையினால் தடவுவதுபோலப் பாவனை செய்து, இடுப்பினண்டையில் வந்தவுடன் கைகளையெடுத்து உதறிவிடவேண்டும். (8-ஆவது நம்பர் படத்தைப் பார்க்கவும்.) இரண்டு நிமிஷநேரம் அதே மார்க்கத்தில் துடிப்பதுபோன்ற பாவனைகளைச் செய்யவும். பிறகு, அவரை, திரும்பி மேல்நோக்கிப் படுக்குமாறு செய்து, அன்னாசயத்தின் (Stomach) மேலாகவும் குடலின் (Bowel) மேலாகவும், இருகைகளினாலும் தடவுவதுபோல் பாவனைசெய்து, இடுப்பின் பக்கத்தில் எடுத்துவிடவேண்டும். ஈரலின்மீது உஷ்ணமான மூச்சை ஊதி விடவேண்டும். இவ்வாறு, ஐந்து ஆறு தடவை செய்யவும். பிறகு, நோயாளிக்கு, மூன்றுதரம் பெரிய ஆழ்ந்த மூச்சை உட்கொண்டு, அம்மூச்சை விரைவில் வெளிவிடும்படி சொல்லவேண்டும். இவ்வாறு

செய்வதெல்லாம், பதினைந்து நிமிஷங்களுக்குள் முடிய வேண்டும்.

அன்னுசயத்தைப்பற்றிய வியாதிகள்

இவற்றில் அஜீரணம் (Indigestion) அன்னுசய வேக்காடு (Gastritis) வயிற்றுநோய், குன்மரோகம் (Dyspepsia) முதலியன அடங்கும். காந்தசக்தியினுல் வைத்தியம் செய்வதில், அன்னுசயத்தைப்பற்றிய வியாதிகளெல்லாவற்றிற்கும் ஒரே முறைதான் ஏற்பட்டிருக்கிறது. நோயாளியை, மேல்நோக்கிப் படுக்கவைத்து, கண்ணை மூடிக்கொள்ளச் சொல்லவும். நோயாளியின் வலப்பக்கத்தை உமது இடக்கையினுலும் இடப்பக்கத்தை உமது வலக்கையினுலுமாக, இரண்டு கைகளினுலும் அன்னுசயத்தின் மேலாக அடிவயிறு வரையிலும் வயிற்றின் குறுக்கே தடவுவதுபோல் பாவனைசெய்து, (9-ஆவது நம்பர் படத்தைப் பார்க்கவும்.) ஒவ்வொரு பாவனையின் முடிவிலும் கைகளை உதறிவிடவேண்டும். இவ்விதமான பாவனைகளைப் பத்துநிமிஷநேரம் செய்யவேண்டும். பிறகு, இரண்டுநிமிஷநேரம் அதேமார்க்கமாகத் துடிப்பது போன்ற பாவனையைச் செய்யவும். உஷ்ணமான மூச்சை நாலு அல்லது ஐந்துதரம் அடிவயிற்றின்மீது உமது வாயினுல் ஊதி விடவும். பிறகு, நோயாளி பெரிய ஆழ்ந்தமூச்சை உட்கொண்டு, அம்மூச்சைச் சீக்கிரத்தில் வெளிவிடும்படி அவர்க்குச் சொல்லவும். இவ்வாறு மூன்று தரம் செய்யச் சொல்லவும். இவ்வாறு செய்வதெல்லாம், சுமார் இருபது நிமிஷநேரத்தில் முடியவேண்டும்.

இரைப்பை வியாதிகள்

நோயாளியை மேல்நோக்கிப் படுக்கும்படி செய்து, அவன் தனது கண்களை மூடிக்கொண்டு கூடியவரையில் தனது தேகத்தைத் தளர்த்திக்கொள்ளும்படி அவனுக்குச்

No. 13.

இப்படமானது, புறங்கையிலுள்ள சுட்ட காயத்திற்குக் குளிர்ந்த மூச்சை உபயோகிக்கும் வழியைக் காட்டுகிறது.

சொல்லவும். பிறகு, உமது இடக்கையை நோயாளியின் அன்னுசயத்தின் அடிப்பாகத்தின்மீது வைத்துக் கொண்டு, நோயாளியின் தலையின்மீது உமது வலக்கையினல் தடவுவதுபோல் பாவனைகளைச் செய்யவும். அப்போது, நோயாளியின் வலதுகன்னப்பொறியை உற்றுப் பார்த்துக்கொண்டு, அவனுடைய நோவு தீர்ந்துவிட்டதென்று மனவுறுதியுடன் பிரபோதமாக உமது மனதுக்குள்ளேயே சொல்லவும். இவ்வாறு பத்துநிமிஷநேரம் செய்யவும். கடைசியாக, மூன்றுதரம் அவர் நாசித்துவாரங்களினல் மூச்சை உட்கொண்டு வாயினல் வெளிவிடும்படி சொல்லவும். பிறகு, குப்புறப்படுத்துக்கொள்ளும்படி அவர்க்குச் சொல்லவும். பிறகு, கொஞ்சம் ஈரமான மணல் எடுத்துக்கொண்டு, அதை இரண்டு சிறு பந்துகளாகச் செய்து, ஒவ்வொன்று ஒவ்வொரு குண்டிக்காயின்மேலாக இருக்குமாறு அவைகளை அவனது முதுகின்மீது வைக்கவும். பிறகு, அவ்விருபந்துகளின் மீதும் மாறிமாறி உமது திருஷ்டியை உறுத்திச்செலுத்தி, உமது மனதுக்குள்ளாகவே நோய்தீரும் என்று பிரபோதமாகச் சொல்லவும்.

குண்டிக்காய், மற்ற மூத்திரசம்பந்தமான இந்திரியங்கள் ஆகிய இவைகளைப் பற்றிய வியாதிகள்

இவற்றில் உதிரத்தில் மூத்திரம்கலந்திருத்தல், சலாசயவியாதிகள், சலாசயவேக்காடு முதலியன அடங்கும். நோயாளியைக் குப்புறப் படுக்கவைக்கவும்; அல்லது, நேராக நிறுத்திவைக்கவும். உமது இரண்டுகைகளினலும் நோயாளியின் தோட்பட்டைகளுக்குச் சற்றுக் கீழாக ஆரம்பித்து, உடம்புமுழுவதன்மேலாகவும் இடுப்பைத் தாண்டியும் தடவுவதுபோல் பாவனைசெய்யவும். (8-ஆவது

நம்பர் படத்தைப் பார்க்கவும்.) இவ்விதபாவனைகள் பத்து நிமிஷநேரம் செய்துவிட்டு, இரண்டுநிமிஷநேரம் துடிப்பதுபோன்ற பாவனைகளைச் செய்யவேண்டும். ஒவ்வொரு குண்டிக்காயின் மேலாகவும், மும்மூன்றுதரம் உஷ்ணமான மூச்சை வாயினால் ஊதவேண்டும். நோயாளியை, திரும்பி மேற்புறம் நோக்கிப் படுக்கும்படி செய்து, அடிவயிற்றிற்கு மூன்று அல்லது நான்கு அங்குலம்மேலே ஆரம்பித்துக் கீழ்ப்புறமாக அடிவயிற்றின் மேலாகவும் இடுப்பைத்தாண்டியும் கைகளினால் தடவுவதுபோல் பாவனைசெய்யவேண்டும். பிறகு, இரண்டு நிமிஷநேரம் அடிவயிற்றின் மேலாகத் துடிப்பதுபோன்ற பாவனைகளைச் செய்யவேண்டும். அடிவயிற்றின்மீது மூன்றுதரம் உஷ்ணமான மூச்சை வாயினால் ஊதவேண்டும். நோயாளிக்கு, பெரிய ஆழ்ந்த மூச்சை உட்கொண்டு அம்மூச்சைச் சீக்கிரத்தில் வெளிவிடும்படி சொல்லவும். இவ்வாறு மூன்றுதரம் செய்யும்படிச் சொல்லவும். இவ்வாறு செய்வதெல்லாம், இருபது நிமிஷநேரத்தில் முடிய வேண்டும்.

புருஷனது ஜனனேந்திரியங்களின் வியாதிகள்

இவற்றில் வீரியமின்மை (Loss of sexual vigor) நீர்ச்சூலை (Hydrocele) அண்டவாயு (Varicocele) முதலியன அடங்கும். இவைகள் எல்லாவற்றிற்கும் வைத்தியம்செய்யும் முறை ஒன்றுதான். நோயாளியைக் குப்புறப்படுக்கவைக்கவும். தலையின் பின்பக்கத்தில் ஆரம்பித்து, கீழ்ப்புறமாகக் கழுத்தின் பின்புறம், முதுகெலும்பு, கால்களின் பின்பக்கம் ஆகிய இவைகளின்மேலாகக் கையினால் தடவுவதுபோல் பாவனைசெய்து, குதிகாலண்டை வந்ததும் கைகளை எடுத்துவிடவேண்டும். இவ்விதமான பாவனைகளைப் பத்துநிமிஷநேரம் வரையில் செய்யவும். இரண்டுநிமிஷநேரம் அதேமார்க்கமாகத் துடிப்பது

போன்ற பாவனைகளைச் செய்யவும். மூளையின் அடிப்பக்கம், பிடரி (Small of the back) ஆகிய இவைகளில் ஒவ்வொன்றின்மீதும் நாலு அல்லது ஐந்துதரம் உஷ்ணமான மூச்சை வாயினால் ஊதவும். பிறகு, நோயாளியைத் திரும்பி மேற்புறம்நோக்கிப் படுக்கும்படி செய்து, தேகமுழுவதன்மீதும், நெற்றியில் ஆரம்பித்துக் கீழ்ப்புறமாகக் கன்னங்களின் பக்கமாகவும், மார்பு, அன்னசயம், அடிவயிறு, ஜன்மேந்திரியங்கள், கால்களின் முன்புறம் ஆகிய இவைகளின்மேலாகவும், கைகளினால் தடவுவதுபோல் பாவனைசெய்து, கால்விரல்களண்டையில் வரும்போது கைகளை எடுத்துவிடவேண்டும். இவ்வாறுபத்துநிமிஷநேரம் செய்துவிட்டு, பிறகு, இரண்டுநிமிஷநேரம் அதேமார்க்கமாகத் துடிப்பதுபோன்ற பாவனைகளைச்செய்யவும். இருதயத்தின்மீது நாலு அல்லது ஐந்துதரம் உஷ்ணமானமூச்சை வாயினால்ஊதவும். நோயாளிக்கு, பெரிய ஆழ்ந்த மூச்சை உட்கொண்டு அம்மூச்சைச் சீக்கிரத்தில் வெளிவிடும்படி சொல்லவும். அவனை, இவ்வாறு மூன்றுதரம் செய்யச்சொல்லவும். இவ்வாறு செய்வதெல்லாம், இருபது நிமிஷநேரத்தில் முடியவேண்டும்.

ஸ்திரீயினுடைய ஜன்மேந்திரியங்களைப் பற்றிய வியாதிகள்.

இவற்றில் கருப்பை தன்னிலையிலிருந்து வீழ்தல், அண்டாசயத்தின் வேக்காடு, சூதகக்கட்டு, சூதகவலி, சூதக இரத்தவாரி அல்லது கருப்பையிலிருந்து உதிரப்பெருக்கு முதலியன அடங்கும். இவ்வியாதிகளில், சூதக இரத்தவாரி, கருப்பையிலிருந்து உதிரப்பெருக்கு ஆகிய இவைகள் விஷயத்தில், கையினாற் செய்யும் பாவனையானது தலைப்புறத்திலிருந்து கீழ்ப்புறம் வருவதைத் தலைகீழாக மாற்றிக்கொள்ளவேண்டும். மற்றவைகளுக்குப்

No. 14.

இப்படமானது, மணிக்கட்டுக் கீல்வாயுரோகத்துக்கு வைத்தியம் செய்யும் வழியைக் காட்டுகிறது.

புருஷஜன்மேந்திரிய வியாதிகளுக்குச் செய்யும் முறையாகத்தான் வைத்தியம் செய்யவேண்டும். (10-ஆவது நம்பர் படத்தைப் பார்க்கவும்).

இருதய வியாதிகள்

இவற்றில், இரத்தாசயத்தைப்போர்த்த சவ்வின் வேக்காடு, இரத்தாசயத்தின் அடைக்கும் சவ்வைப்பற்றிய வியாதிகள், இருதயத்துடிப்பு (11-ஆவது நம்பர் படத்தைப் பார்க்கவும்.) முதலியன அடங்கும். இருதய வியாதிகளெல்லாவற்றிற்கும் வைத்தியம்செய்யும் முறை ஒன்றுதான். இருதயத்தின்மீது ஐந்து அல்லது ஆறு தரம் உஷ்ணமான மூச்சை உமதுவாயினுல் ஊதவும். நோயாளி பெரிய ஆழ்ந்த மூச்சை உட்கொண்டு அம் மூச்சைத் துரிதமாக வெளிவிடும்படி சொல்லவேண்டும். அவனை, இவ்வாறு மூன்றுதரம் செய்யும்படி சொல்லவும். இவ்வாறு செய்வதெல்லாம், பதினைந்துநிமிஷநேரத்தில் முடியவேண்டும்.

(2) நோயாளிக்கு நோவுண்டாகாதபடி, அவனுடைய விலாவெலும்புகளுக்கு இடையே, உமது பெருவிரலினுல் பலமாக அழுத்தவேண்டும். பிறகு, அவனது தொண்டையிலிருந்து அன்னுசயத்தின் பக்கம் வரையில், சிரமத்தை யாற்றுவதற்குத் தடவிக்கொடுப்பதுபோல் உமது கையினுல் பாவனைசெய்து, பிறகு, அவன், தனது வாயைத்திறந்து நாக்கைக் காட்டும்படி சொல்லவேண்டும். பிறகு, நோயாளினது வாயை உற்றுப்பார்த்துக்கொண்டு, அந்நோயாளியைவிட்டு அவ்வியாதி அகலுமென்று மிகுந்த மனவுறுதியுடன் உமது மனதுக்குள்ளாகவே பிரபோதகமாகச் சொல்லவும். இவ்வாறு பத்துநிமிஷம் செய்யவேண்டும். கடைசியாக, நோயாளிக்கு, மூக்கினுல்

மூச்சை உட்கொண்டு அதை வாயினல் வெளிவிடச் சொல்லவும். இவ்வாறு செய்யும் சமயம் முழுவதும், நோயாளியானவன் கண்ணை மூடிக்கொண்டு செயலற்றவனாக இருக்கவேண்டும்.

இரத்தக் குறைவு

இரத்தசம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் நோயாளியின் தேகமுழுவதும் முன்புறத்திலும் பின்புறத்திலும் வைத்தியம் செய்யவேண்டும். புருஷ ஜன்மேந்திரிய வியாதிகளின் விஷயத்தில் சொல்லியிருக்கிறவண்ணம் கையினல் பாவனைகளைச் செய்யவேண்டும். ஐந்தாறுதரம் இருதயத்தின்மீது உஷ்ணமான மூச்சை விடவேண்டும்; அவ்வாறே, அன்னசயத்தின்மீதும் விடவேண்டும். முதலிற்செய்த பாவனைகளின் மார்க்கமாகவே இரண்டுநிமிஷ நேரம் துடிப்பதுபோன்ற பாவனைகளைச் செய்யவேண்டும். நோயாளிக்கு, பெரிய ஆழ்ந்த மூச்சை உட்கொண்டு அம்மூச்சை விரைவாக வாயினல் வெளிவிடும்படி சொல்லவும். அவரை இவ்வாறு மூன்றுதரம் செய்யச் சொல்லவும்.

சுவாச இந்திரியங்களின் வியாதிகள்

இவற்றில் க்ஷயரோகம், சுவாசக்குழாய்களைப்பற்றிய ரோகம், தொண்டைக்கட்டு, ஜலதோஷம், சுவாசாசயத்திலிருந்து உதிரப்பெருக்கு, சுவாசாசயத்தைப் போர்த்த சவ்வைப்பற்றிய வியாதி, சுவாசகாசம், குரல்வளைவேக்காடு, உண்ணுக்குவளர்தல், கபக்ஷயரோகம் முதலியன அடங்கும். நோயாளியை, மேல்நோக்கிப்படுக்க வைத்து, கண்களை மூடிக்கொள்ளச் சொல்லவும். இருகைகளினலும், நோயாளியின் தொண்டையில் ஆரம்பித்துக் கீழ்ப்புறமாக மார்பின்மேலாக அன்னசயத்தின் அடிப்பக்கம்

வரையிலும், தடவுவதுபோல், பாவனைசெய்யவும். உமது வலக்கையை நோயாளியின் இடப்புறமாகவும் இடக்கையை வலப்புறமாகவும் கொண்டுவந்து எடுத்துதறிவிட வேண்டும். இவ்விதமானபாவனைகளைப் பதினைந்து நிமிஷ நேரம் செய்துவிட்டு, பிறகு, இரண்டு சுவாசாசயங்களின்மீதும் உஷ்ணமான மூச்சை விடவேண்டும். நோவு தொண்டையிலிருந்தால், அதன்மீது உஷ்ணமான சுவாசத்தை ஊதவேண்டும். ஒவ்வொரு சுவாசாசயத்தின் மீதும் மும்மூன்றுதரம் இவ்வாறு ஊதவேண்டும். நோவு தொண்டையிலிருந்தால், தொண்டையின்மீது மூன்றுதரம் அவ்வாறு ஊதவேண்டும். பிறகு, இரண்டு நிமிஷ நேரம் அதேமார்க்கமாகத் துடிப்பதுபோன்ற பாவனைகளைச் செய்யவும். நோயாளிக்கு, பெரிய ஆழ்ந்த மூச்சை உட்கொண்டு அம்மூச்சைச் சீக்கிரத்தில் வெளிவிடும்படி சொல்லவும். அவனை இவ்வாறு மூன்றுதரம் செய்யச் சொல்லவும். இவ்வாறு செய்வதெல்லாம், இருபது நிமிஷத்தில் முடியவேண்டும்.

கபக்ஷய ரோகம்

நோயாளியை ஓர் சாய்வுநாற்காலியின்மீது உட்கார வைத்து, முன்னால் பிடிப்புக்கு ஓர் ஆதாரமும், முழங்கைகளை வைத்துக்கொள்ள ஓர் திண்டும் வைக்கவேண்டும். பிறகு, கண்களை மூடிக்கொண்டு ஒரு விஷயத்தையும்பற்றி யோசிக்காமலிருக்கும்படி அவர்க்குச் சொல்லவும். ஐந்துநிமிஷநேரம், முதுகெலும்பின்மேல் தடவுவதுபோல் பாவனை செய்யவும். மார்பின்மீதும், முதுகெலும்பின்மீதும் உஷ்ணமான மூச்சை ஊதவும். அவனது முதுகெலும்பை, மூன்றுநிமிஷநேரம் நன்றாகப் பிடித்துக்கொடுத்து, அவனது கைகளிலுள்ள இரத்தத்தாதுக்களை, இரண்டு நிமிஷநேரம் அழுத்தவும். பிறகு,

No. 15.

இப்படமானது, வாதரோகத்திற்கு வைத்தியம்செய்வதற்கு, உஷ்ண மான மூச்சை எவ்வாறு உபயோகிப்பதென்பதைக் காட்டுகிறது.

நோயாளி மூச்சை மூக்கின்வழியாக உட்கொண்டு வாயினுல் வெளிவிடும்படி சொல்லவும். குறைந்தபக்ஷம் ஆறு தரம் இவ்வாறு செய்யும்படி சொல்லவும்.

நரம்புகளைப்பற்றிய வியாதிகள்

திமிர்வாதம், நரம்புவேக்காடு, அங்கவிகிர்தி, நரம்புகளின் மிதமிஞ்சின வேக்காடு, வலிப்பு, தூக்கமின்மை முக்கியமான நரம்பின் சீர்குலைவு, கருப்பவாயு முதலியன இவற்றில் அடங்கும். நோயாளியைக் குப்புறப் படுக்கவைத்து; புருஷ ஜன்மேந்திரிய வியாதிகளின் வைத்தியவிஷயமாகச் சொல்லியவாறே, கையினுல் தடவுவதுபோல் பாவனைகள் செய்யவும். பிறகு, தேகம் சிவக்குமாறு அறையவும். (12-ஆவது நம்பர் படத்தைப் பார்க்கவும்.) பிறகு, இருதயம், மூளையின் அடிப்பக்கம், பிடரி ஆகிய இவைகளின்மீது உஷ்ணமான மூச்சை வாயினுல் ஊதிவிடவும். பிறகு, இரண்டு நிமிஷநேரம் அதேமார்க்கமாகத் துடிப்பதுபோன்ற பாவனைகளையும் செய்யவேண்டும். நோயாளிக்கு, பெரிய ஆழ்ந்த மூச்சை உட்கொண்டு அதைச் சீக்கிரத்தில் வெளிவிடும்படி சொல்லவும்.

சருமத்தைப்பற்றிய வியாதிகள்

இவற்றில் சிலந்தி, சொறி, சிரங்கு, மண்டைக்கறுப்பான், சொறிதலை, சிலந்திப்பரு, வெந்தபுண், சுட்டபுண், குளிராலுண்டாகும் வீக்கம், கண்டமாலை, அக்கி முதலியன அடங்கும். நோயுள்ள இடத்திற்குச் சற்று மேலாக ஆரம்பித்து, நோயுள்ள இடத்தைத் தாண்டிக் கீழே சுமார் நான்கு அங்குலதூரம்வரையில் கைகளினுல் தடவுவதுபோலப் பாவனைகள்செய்து, பிறகு, கைகளை உதறிவிடவேண்டும். இவ்விதபாவனைகளை, சரீரத்தைத்

தொடாமல் செய்யவேண்டும். அதாவது, மேற்கூறியமார்க்கமாகத் தேகத்திற்குக் காலங்குலதூரத்தில் அப்பாவனைகளைச் செய்யவேண்டும். கைகள் தேகத்தைத் தொடக்கூடாது. ஒவ்வொரு பாவனைக்குப்பிறகும் கைகளை உதறிவிடவேண்டும். அவ்வாறு செய்யும்போது, நோவுள்ள இடத்திற்குச் சற்றுமேலே ஆரம்பித்து, அதற்குக்கீழ் நான்குஅங்குலதூரம் வரையிலாவது, அல்லது, முனை வரையிலாவது குளிர்ந்த சுவாசத்தை வாயினால் ஊதிவிடவேண்டும். (குளிர்ந்த சுவாசத்தைப்பற்றி 13 - ஆவது நம்பர் படத்தைப் பார்க்கவும்.) நோயாளிக்கு, பெரிய ஆழ்ந்த மூச்சை உட்கொண்டு அதைச் சீக்கிரத்தில் வெளிவிடச்சொல்லவேண்டும். அவரை இவ்வாறு மூன்று தரம் செய்யும்படி சொல்லவும். இவ்வாறு செய்வதெல்லாம், பதினைந்துநிமிஷநேரத்தில் முடியவேண்டும்.

கோணலான கழுத்து

கழுத்தின்மீது தொண்டைவரை கைகளினால் தடவுவதுபோன்ற பாவனையைச் செய்யவேண்டும். கைகள் தொண்டையைத் தாண்டினதும், அவைகளை உதறிவிடவேண்டும். கழுத்தை அழுத்தி வேகமாய்ப் பிடித்துக்கொடுக்கவும். ரொட்டிமாவைப்பிசைவதுபோலக் கழுத்தின் தசைநார்க்கட்டுக்களைப் பிசைந்துகொடுக்கவும். இவ்வாறு பதினைந்து அல்லது இருபதுநிமிஷநேரம் செய்யவேண்டும். கழுத்தில் வியாதியிருக்கும் இடத்தின்மீது உஷ்ணமான மூச்சை நான்குமுறை வாயினால் ஊதவும். இரண்டுநிமிஷநேரம்வரையில் அதேமார்க்கத்தில் துடைப்பதுபோன்ற பாவனைகளைச் செய்யவும். நோயாளி பெரிய ஆழ்ந்த மூச்சை உட்கொண்டு அதைச் சீக்கிரத்தில் வெளிவிடும்படி அவர்க்குச் சொல்லவும். இவ்வாறு அவரை மூன்றுதரம் செய்யச் சொல்லவும். இவ்வாறு

செய்வதெல்லாம், சுமார் இருபதுநிமிஷநேரத்தில் முடிய வேண்டும்.

மலக்குடலைப்பற்றிய வியாதிகள்

இவற்றில் இரத்தமூலம், மூலக்கிராணி, புண்புரை முதலியன அடங்கும். நோயாளியைக் குப்புறப் படுக்க வைக்கவேண்டும். இடுப்புக்கு மேலாகவுள்ள முதுகெலும்பின்மீது ஆரம்பித்து, கீழ்ப்புறமாக உடம்பின் அடிப்பாகம்வரையில் இரண்டுகைகளினாலும் தடவுவது போலப் பாவனைசெய்து, கைகளை எடுத்துவிடவேண்டும். இவ்வித் பாவனைகள், பத்து அல்லது பதினைந்து நிமிஷநேரம்வரையில் செய்யவேண்டும். பிறகு, இரண்டு நிமிஷநேரம்வரையில் துடிப்பதுபோன்ற பாவனைகளைச் செய்யவேண்டும். பிறகு, நோயாளி பெரிய ஆழ்ந்த மூச்சை உட்கொண்டு அதைச் சீக்கிரத்தில் வெளி விடும்படி அவர்க்குச் சொல்லவும். அவரை இவ்வாறு மூன்றுதரம் செய்யச் சொல்லவும்.

மண்டைத்தடிமன்

காந்தசக்தியினால் வைத்தியஞ்செய்து சொஸ்தமாக்குவதில் மிகுந்த சிரமத்தைத் தரக்கூடிய வியாதிகளில் இது ஒன்று. ஆனால், அநேகந்தரம், இவ்வியாதியானது காந்தசக்தியினாலேயே, மிகவும் ஆச்சரியத்தை விளைக்கத்தக்கவாறு சொஸ்தமாக்கப்பட்டிருக்கிறது. இவ்வியாதியைத் தீர்ப்பதற்கு, இரண்டு கைகளினாலும், உச்சந்தலையில் ஆரம்பித்து நெற்றியின்மேலாக மூக்குநுனி வரையில் தடவுவதுபோல் பாவனைசெய்து, கைகளை உதறிவிடவேண்டும். இவ்விதபாவனைகள், பத்து அல்லது பதினைந்துநிமிஷநேரம் செய்யவேண்டும். தொண்டையில் நோவு இருந்தால், தொண்டைமுதல் மார்பு

No. 16.

இப்படமானது, மனோவசியதத்துவத்தினால் தூங்கிக்கொண்டிருக்கப்பட்ட ஒருவனை எவ்வாறு பிரபோதத்தினால் மதுபானம்செய்யும் வழக்கத்திலிருந்து நீக்கும்வழியைத் தெரிவிக்கிறது.

வரையில் அவ்விதபாவனைகளைச் செய்யவேண்டும். குடலிலாவது அன்னுசயத்திலாவது நோவு இருந்தால், நோவுள்ள பாகத்தின்மீது அப்பாவனைகளைச் செய்ய வேண்டும். பிறகு, இரண்டுநிமிஷநேரம் துடிப்பது போன்ற பாவனைகளைச் செய்யவேண்டும். அப்போது, தடிமனுள்ள இடத்தில், உஷ்ணமான மூச்சை வாயினுல் ஊதிவிடவேண்டும். நோயாளி பெரிய ஆழ்ந்த மூச்சை உட்கொண்டு அதைச் சீக்கிரத்தில் வெளிவிடும்படி அவர்க்குச் சொல்லவும். அவரை இவ்வாறு மூன்று தரம் செய்யச் சொல்லவும். இவ்வாறு செய்வதெல்லாம், இருபதுநிமிஷத்தில் முடியவேண்டும்.

குடல் வியாதிகள்

இவற்றில் அதிசாரம், வயிற்றுக்கடுப்பு, மலச்சிக்கல், வயிற்றுவலி, வயிற்றுவாயு, அடிவயிற்றினிடத்தை மூடிய சவ்வின் வேக்காடு முதலியன அடங்கும். நோயாளியை மேல்நோக்கிப்படுக்கவைக்கவும். அடிவயிற்றின்மீது பத்து நிமிஷநேரம் தடவுவதுபோன்ற பாவனைகளைச் செய்யவும். (9-ஆவது நம்பர் படத்தைப் பார்க்கவும்.) பிறகு இரண்டு நிமிஷநேரம் துடிப்பதுபோன்ற பாவனைகளைச் செய்யவும். அடிவயிற்றின்மீது, மூன்றுதரம் உஷ்ணமான மூச்சை வாயினுல் ஊதவும். நோயாளி பெரிய ஆழ்ந்த மூச்சை உட்கொண்டு அதைச்சீக்கிரத்தில் வெளிவிடும்படி அவர்க்குச் சொல்லவும். அவரை இவ்வாறு மூன்றுதரம் செய்யச் சொல்லவும். இவ்வாறு செய்வதெல்லாம், இருபது நிமிஷநேரத்தில் முடியவேண்டும்.

எல்லாவித ஜ்வரங்களும்

புருஷ ஜன்மேந்திரிய வியாதிகளின் வைத்தியத்திற் காகச் சொல்லப்பட்டபடியே, தேகமுழுவதன்மீதும்,

முன்னும் பின்னும் தடவுவதுபோலப் பாவனைகள் செய்ய வேண்டும். இரண்டு நிமிஷநேரம், அதோமார்க்கத்தில் துடிப்பதுபோன்ற பாவனைகளைச் செய்யவேண்டும். ஐந்து நிமிஷநேரம் தேகமுழுவதன்மீதும் குளிர்ந்த மூச்சை வாயினால் ஊதவேண்டும். நோயாளிக்கு, பெரிய ஆழ்ந்த மூச்சை உட்கொண்டு அதைச் சீக்கிரத்தில் வெளி விடும்படி சொல்லவும். அவனை இவ்வாறு மூன்றுதரம் செய்யச்சொல்லவும்.

(2) மேல்நோக்கிப் படுத்துக்கொண்டு தனதுகண் களை மூடிக்கொள்ளும்படி நோயாளிக்குச் சொல்லவும். நோயாளியின் சரீரத்தின்மீதுபடாமல், அவனது தலை முதல் கால்வரை தடவுவதுபோல் பாவனைசெய்து, அவ் வாறு செய்த ஒவ்வொருதரத்தின் பிறகும், உமது விரல் களை அவைகளிலுள்ள தண்ணீரை உதறுவதுபோல் உதறவேண்டும். ஜ்வரம் தீரவேண்டுமென்று மனவுறுதி யுடன் இச்சித்து, மேற்கூறியபடி பத்துநிமிஷநேரம் செய் யவும். இவ்வாறு செய்யும்போது, கைகளில் எரிச்சல் உண்டானால், உமது கைகளைக் குளிர்ந்த ஜலத்தில் நனைக்கவும். கடைசியாக, மூன்றுதரம் நோயாளி மூக்கி னால் மூச்சை உட்கொண்டு அதைச் சீக்கிரமாக வாயி னால் வெளிவிடும்படி சொல்லவும். ஜ்வரம், க்ஷயரோகம், குஷ்டரோகம் ஆகிய இவைகள் தொத்துவியாதிகளாத லால், நீர் மிகவும் ஜாக்கிரதையோடு இருக்கவேண்டும்.

தேகத்தின் எப்பாகத்திலிருந்தாவது இரத்தப்பெருக்கு

இரத்தப்பெருக்கை நிறுத்துவதற்கு, அதிருக்கும் பாகத்தின்மேலாக அதைத் தொடாது அடியிலிருந்து மேற்புறமாகத் தடவுவதுபோலப் பாவனைசெய்ய வேண் டும். (19-ஆவது நம்பர் படத்தைப் பார்க்கவும்.)

பித்தம்

இதற்கு முதலில் தலைவலிக்குச் சொல்லியிருக்கும் முறையாகவே வைத்தியம்செய்துவிட்டு, பிறகு, குடல் வியாதிகள் என்ற தலைப்பின்கீழே சொல்லப்பட்டிருக்கிற வண்ணமாக, அடிவயிற்றின் மேலாகப் பாவனைகளைச் செய்யவேண்டும்.

தலைக்கிறுகிறுப்பு

இதற்கும், தலைவலிக்குச் சொல்லிய முறைப்படியே வைத்தியம்செய்யவேண்டும். பிறகு, இருதயவியாதி என்ற தலைப்பெயரின் கீழாகச் சொல்லப்பட்டிருக்கிற வண்ணமாக, இருதயத்தின் மேலாகப் பாவனைகளைச் செய்யவேண்டும்.

கையில் கீல்வாயு

ஒரு வஸ்திரத்தையாவது அல்லது கைக்குட்டையையாவது எடுத்துக்கொண்டு நான்கு மடிப்பாக மடித்துக்கொண்டு, நோவுள்ள இடத்தின்மீதுபோட்டு வாயினுல் உஷ்ணமான சுவாசத்தை அதன்மீது ஊதவும். பிறகு சரோலென்று அத்துணியை எடுத்துவிட்டு நோவுள்ள இடத்திற்கு நாலு அங்குலதூரத்திற்கு மேலாரம்பித்து, அதற்கு நாலங்குலதூரம் கீழ்வரையில் நோவுள்ள இடத்தின்மீது தடவிக்கொடுப்பதுபோல் கைகளினுல் பாவனை செய்து, பிறகு, கைகளிலுள்ள ஏதோ ஓர் வஸ்துவை எறிந்துவிடுவதுபோல் கைகளை இழுத்து உதறிவிடவும். இவ்வாறு ஏழு அல்லது எட்டுதடவை செய்யவும். பிறகு, நோயாளியைத் தனது நாசியினுல் பெரியசுவாசத்தை உட்கொண்டு வாயினுல் சீக்கிரமாக வெளிவிடச் சொல்லி, அவர் அவ்வாறு செய்யும்பொழுது நோவுள்ள இடத்தின் மீது, தடவிக்கொடுப்பதுபோல் பாவனைசெய்து, அவர் சுவாசத்தை வெளிவிடும்சமயத்தில் கையை இழுத்துக்

கொள்ளவும். இவ்வாறு மூன்றுதடவைசெய்யவும். பிறகு, இன்னும் சிலதடவை தடவிக்கொடுப்பதுபோல் பாவனை செய்துவிட்டு, "இப்பொழுது நீர் கண்களைத்திறக்குங்கால் மிகவும் சௌகரியமாயிருக்கும்" என்றுசொல்லவும். பிறகு, கண்களைத்திறக்கச்சொல்லவும். இவ்வாறு செய்யின், பெரும்பாலும் நோயாளிகளுக்கு மிகுந்த அநுகூலமுண்டாகுமென்பதைக் கண்டுகொள்வீர்.

கைகளை மேலே வைப்பதனால் வியாதியைச் சொஸ்த மாக்குதல்

காந்தசக்தியினால் ஒருவருக்கு வைத்தியம் செய்வதற்குமுன், உமது கைகளை அவைகளில் இரத்தம் ஓடுமாறு தொங்கவிடவும். பிறகு, மெதுவாக உமது விரல்களை மூடிக்கொண்டு, கொஞ்சம்கொஞ்சமாக முஷ்டியை நன்றாக இறுக்கிக்கொள்ளவும். பிறகு, உமது கைகளின் தசைநார்க்கட்டுக்களைக் கொஞ்சம்கொஞ்சமாக விறைப்பாகச் செய்துகொள்ளவும். பிறகு, உமது கைகளைத் தளர்த்தவும். ஆனால், முஷ்டிகளை அவ்வாறே வைத்துக்கொள்ளவும். ஒருநிமிஷம் அவைகளை இறுக்கி வைத்துக்கொண்டிருக்கவும். பிறகு, நோயுள்ள இடத்தின்மீது உமது கைகளை வைக்கவும். நோயாளியின்மீது அரைநிமிஷநேரம் வைத்திருந்துவிட்டு, பிறகு, இருகைகளையும், சூடாகும் வரையில் ஒன்றோடொன்று தேய்க்கவும். அவைகள் உஷ்ணமானபிறகு, விரைவாக மறுபடியும் நோயாளியின் மீது வைக்கவும். எப்பொழுதும் செயலற்றவனாகவும், உமது வைத்தியத்தை ஏற்றுக்கொள்பவனாகவும் இருக்கும்படி நோயாளிக்குச் சொல்லவும். நோயாளியானவன் கண்களை மூடிக்கொண்டு ஆழ்ந்த மூச்சை விடுவதனால் இது சுலபமாகும். மேற்கூறியவாறு, பதினைந்து நிமிஷநேரம் செய்யவேண்டும்.

ஓர் சிறுதுணியைக் காந்தசக்தியுடைய தாக்கும் வழி

ஓர் சிறுதுணியைக் காந்தசக்தியுடையதாக்க விரும்பினுல் அதை உமது முகத்தின்மீது போட்டுக்கொண்டு, உமது இருகண்களினின்றும் வீசும் ஒளியானது, அதனூடே செல்லுமாறு உமது இருகண்களையும் விழித்தவண்ணமாகவே வைத்துக்கொண்டு, அதன்மீது சுவாசம்விட வேண்டும். இரண்டு மூன்று நிமிஷநேரம் அதை அவ்வாறே வைத்துக்கொண்டு, அவ்விரண்டு மூன்று நிமிஷ நேரமும் நோயாளியானவன் தனது சரீரத்திலோ மனதிலோ உள்ள சீர்கேட்டை நிவிருத்தித்துக்கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்திலேயே மனதை உறுதியுடன் செலுத்தவும். பிறகு, அக்காந்தசக்தி யுடையதாக்கியதுணியை நோயாளியினிடம் கொடுத்து, நோய்வீற்றிருக்குமிடத்தில் அத்துணியைப் போட்டுக்கொள்ளும்படி சொல்லவும்.

ஜலத்தைக் காந்தசக்தி யுடையதாக்கும் வழி

சுத்தமான ஜலம் நிறைந்த ஓர் கண்ணுடிப்பாத்திரத்தை உமது இடது உள்ளங்கையின்மீது வைத்துக்கொண்டு, சிறிதுநேரம் வாயினுல் மெதுவாக விடாது ஊதவும். பிறகு உமது வலதுகையின் விரல்களைக் கீழ்நோக்குமாறு அப்பாத்திரத்திற்குள்ளிட்டுக்கொண்டு, அந்த ஜலத்தின்மீது உமது திருஷ்டியை ஊன்றச் செலுத்தி, நோயாளியானவன் தனது நோயை ஜயித்து நிவிருத்தித்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்திலேயே மனதை உறுதியுடன் செலுத்தவும். பிறகு, நோயாளியை அந்த ஜலத்தை இஷ்டப்பட்ட அளவு குடிக்கும்படி சொல்லவும்.

முருகன் துணை.

ஹஸ்தரேகை சாஸ்திரம்.

மேற்குறித்த சாஸ்திரம், வித்துவான்களின் உதவியைக்கொண்டு, சிறுவர் சிறுமியரும் தெரிந்துகொள்ளும்படியான செந்தமிழ்வசனநடையில் எழுதி, விஷயங்கள் வெளிப்படையாக விளங்கும்படி சுமார் 170-படங்களுடன் உயர்ந்த தளமான காகிதத்தில் பெரிய எழுத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்புஸ்தகத்தை வாசிக்கும் அனைவரும், தங்களுடைய விவாஹம், ஆயுள், இல்லறச்சுகம், சந்தானம், ஐசுவரியம், காரியசித்தி, தேகசௌக்கியம், வியாதி, தனநஷ்டம், மரணம் முதலிய பலவிஷயங்களை வேறொருவருடைய உதவியில்லாமல் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். அன்றியும், இப்புஸ்தகம், சர்வவல்லமையுமுள்ள ஈசனது இரகசியங்களையும், விதிவசம் என்கிற கோட்பாட்டையும், நமது வாழ்க்கையின் இரகசியங்களையும், மூளை ஈரல் மனவுறுதி இவைகளைப்பற்றிய விஷயங்களையும், இரத்தவோட்டத்தின் மர்மங்களையும் வெளிப்படுத்துகிற திறவுகோலாக

இருக்கிறது. முக்கால வரலாறுகளையும் அறிந்துகொள்வற்கு இந்நூல் மிகவும் துணையாகும் என்பதற்கு ஐயமில்லை. மேலும், இது, நம்மை நாமே அறிந்து கொள்ளும்படியாகச் செய்து, நம்மிடத்திலுள்ள குறைகளை நமக்குக் காட்டி, எவ்வித புத்திவைபவங்களை நாம் அபிவிருத்திசெய்ய வேண்டுமென்றும், எத்தொழிலை நாம் கைக்கொண்டால் மிகுந்த காரியசித்தியை அடையக்கூடுமென்றும் நமக்குத் தெரிவிக்கிறது. இவ்வளவு விஷயங்களைக் கையிலிருந்து நாம் தெரிந்துகொள்ளக்கூடுமென்ற விஷயம், பலருக்கு மிகுந்த ஆச்சரியத்தை விளைக்கும். இம்மாதிரியான அரிய பெரிய நூல் இதுவரையில் நமது இந்துதேசத்தில் ஒருவராலும் வெளிப்படுத்தப்படவில்லை. ஆகையால், இன்றே இதைப்பெறுதற்கு முயற்சி செய்யுங்கள். இந்த அருமையான நூல் ஒவ்வொருவரிடத்திலும் அவசியம் இருக்கத்தக்கது.

வி. பி. தபால் செலவுடன் ரூபா 2-3-0.

V. S. குமாரசுவாமி முதலியார்,

வேலூர். (N. A. Dist.)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

Apply to :—

V. S. KUMARASWAMI MUDALIAR,

VELLORE. (North Arcot District)

ஏ. ராஜ்

எனது அன்பார்ந்த தாத்தா அவர்களே,
எனது மருத்துவ நூல் இதுவே, நான் இந்த காந்த சிகிச்சை வைத்தியத்தில் சிறப்புப் பெற, உங்கள் நல்லாசியை வேண்டுகின்றேன்.

தங்களின்
அன்புள்ள
பேரன்
த. அடம்பகாபதி
25-3-90